விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 217 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 08 வியாழக்கிழமை (24.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## செம்மணி மனித புதைகுழியில்
# 5 மனித எச்சங்கள் நேற்று அடையாளம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனித புதைகுழியில் 5 மனித எச்சங்கள் நேற்று அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இதுவரை 85 மனித எலும்புக்கூடுகள் இனங்காணப்பட்டுள்ளன. *(16ஆம் பக்கம் பார்க்க)*



## புதிய பிரதம நீதியரசராக ப்ரீத்தி பத்மன் சூரசேன
### அரசியலமைப்புப் பேரவை அனுமதி

(கொழும்பு)

புதிய பிரதம நீதியரசராக ப்ரீத்தி பத்மன் சூரசேனவின் பெயரை அரசியலமைப்பு பேரவை ஏகமனதாக அங்கீகரித்துள்ளது.



15ஆம் பக்கம் பார்க்க

### செம்மணி புதைகுழியில்
## காப்பு வடிவிலான பொருள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் காப்பு வடிவிலான பொருள் ஒன்று நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதை 15ஆம் பக்கம் பார்க்க

## வரலாற்றை மாற்றவும், மறைக்கவும் அநுர அரசாங்கம் முயற்சி
### சபையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(கொழும்பு)

வரலாற்றை மாற்றியமைக்கவும் மறைக்கவும் அநுர அரசாங்கம் முயற்சி செய்கின்றது என பாராளுமன்ற உறுப்பினர் 15ஆம் பக்கம் பார்க்க



## காத்தோட்டி காய்க்கு
### நேற்று கடும் கிராக்கி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணச் சந்தைகளில் காத்தோட்டிக் 15ஆம் பக்கம் பார்க்க

## நாடு முழுவதும் சுற்றிவளைப்பு
### 458 பேர் கைது

(கொழும்பு)

நாடு முழுவதும் நேற்று முன்னெடுக்கப்பட்ட 15ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் அரசியல் கைதிகளுக்கு நீதி கோரி இன்று போராட்டம்

(நல்லூர்)

சிறைக்குள் படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை நினைவுகூர்ந்து சிறையிலிருந்து இன்னமும் விடுவிக்கப்படாத உறவுகளுக்கு நீதி கோரிய விடுதலை நிகழ்வு இன்று மற்றும் நாளை யாழ்ப்பாணம் நல்லூர் கிட்டுப்பூங்காவில் இடம்பெறவுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் காணி விடுவிப்பு தொடர்பில் ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்திலுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று வட மாகாண ஆளுநர் செயலகத்தில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் 15ஆம் பக்கம் பார்க்க



தாமதிக்காமல் நிறைவுக்கு முந்தய விலையில் பெற இப்போதே முந்துங்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்வி அறிவித்தல்
## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.
## சபைநிதி மற்றும் முத்திரைத் தீர்வை மூலமான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

01. நல்லூர் பிரதேச சபை சார்பாக உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளை கோருகின்றார்கள்.

02. விலைக்கேள்வியானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கோரப்படுகின்றது.

03. விலைக்கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் SBD - 03 இல் தரவு அட்டவணை (Schedule) இலும் SBD - 01 இல் Bidding Data இலும் கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. பெறுமதிசேர்வரி (VAT) பதிவினை கொண்டவர்கள் கேள்விகள் சமர்ப்பிக்கப்படும் போது பெறுமதிசேர்வரி (VAT) சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டுமே சபையினால் பெறுமதிசேர்வரி (VAT) கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் 'தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில்' எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணமொன்றை தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் முகவரியில் 2025.07.24 ஆம் திகதியிலிருந்து 2025.08.11 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 03.00 வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக தொடர் இலக்கம் 01,03 ஆகிய தொடரிலக்கமுடைய வேலைகளிற்கு ரூபா. 6,000.00 உம் இலக்கம் 02,04,05 ஆகிய தொடரிலக்கமுடைய வேலைகளிற்கு ரூபா. 3,000.00 உம் (வரி நீங்கலாக) உம் பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

08. கேள்வி ஆவணத்தை இரு பிரதிகளில் (மூலம்,பிரதி) பூரணப்படுத்தி தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் என்னும் முகவரிக்கு 2025.08.12 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வி பிணை வைப்புத் தொகையினை தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை என்ற பெயரில் கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

10. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 2025.07.31 ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Document Issuing/Purchasing Period | | | From 2025.07.24 - 2025.08.11 | | | | |
| | | Pre – Bid Conferece | | | At 10.00 A.M On 2025.07.31 | | | | |
| | | Closing and Opening of Bid | | | At 10.00A.M on 2025.08.12 | | | | |
| தொ.இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப்பிணை - பிணை வைப்பு | வேண்டப்படும் கேள்விப்பிணை - செல்லுபடியாகும் காலம் | |
| முத்திரைத்தீர்வை வேலைத்திட்டங்கள் | | | | | | | | | |
| 01 | NPS/SD / 2025/Karai. Lan.Sca/01 | Landscaping and filling at Waste Burning Incineration Centre in Karaimunangu, Ariyalai | 10.91 | 84 நாட்கள் | C7 above (Road) | 77 நாட்கள் | 164,000.00 | 2025.11.20 | |
| 02 | NPS/SD / 2025/Karai. In. Ro/02 | Internal Road and culverts at Waste Burning Incineration Centre in Karaimunangu, Ariyalai | 3.45 | 84 நாட்கள் | C8 above (Road) | 63 நாட்கள் | 52,000.00 | 2025.11.06 | |
| சபைநிதி வேலைத்திட்டங்கள் | | | | | | | | | |
| 03 | NPS/CF-II/ 2025/Ku.Ro/03 | Rehabilitation of Kulamkarai Road at Kokkuvil | 27.29 | 112 நாட்கள் | C5 above (Road) | 91 நாட்கள் | 410,000.00 | 2025.12.04 | |
| 04 | NPS/CF-II/ 2025/Clearing/04 | Maintanance of Drainage Canal at Kokkuvil, Kondavil | 3.96 | 84 நாட்கள் | C8 above (Road) | 63 நாட்கள் | 198,000.00 | 2025.11.06 | |
| 05 | NPS/CF-II/ 2025/Bou/05 | Repairs of Boundary Wall to Karaikal Solid waste Management Centre at Inuvil | 1.60 | 84 நாட்கள் | C8 above (Building) | 49 நாட்கள் | 24,000.00 | 2025.10.23 | |

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார சபை பெறுகைக் குழு,**
**நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.** (C-3495) **2025.07.21**

## மண்டைதீவு கல்வி வளர்ச்சிக் கழகத்தின் மாணவர் கௌரவிப்பு நாளை

(மண்டைதீவு)

மண்டைதீவு கல்வி வளர்ச்சிக் கழகம் நடத்தும் மாணவர் கௌரவிப்பும் பரிசில் வழங்கலும் நாளை 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் மண்டைதீவு மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறும்.

கல்வி வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் கலாநிதி செ.சேதுராஜா தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில், பிரதம விருந்தினராக லண்டன் நோத் வெஸ்ட் யுனிவேர்சிற்றி கொஸ்பிற்றல் வைத்திய நிபுணர் செல்வலிங்கம் தெய்வகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.யோகலிங்கம், கௌரவ விருந்தினராக மண்டைதீவு மகா வித்தியாலய அதிபர் சி.இளங்கோ ஆகியோர் கலந்துகொள்வர்.

இந் நிகழ்வில் உயர்தரம், சாதாரண தரம் மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (ந)

### பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து
## தென்னகோனை பதவி நீக்க
### வாக்கெடுப்பு நடத்தப்படும் - சபாநாயகர்

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தொடர்பில் ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் அவர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அவரை பதவி நீக்குவது தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தி வாக்கெடுப்பை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை (23) சபாநாயகர் அறிவிப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

சபாநாயகர் தனது அறிவிப்பில் மேலும் தெரிவிக்கையில், பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனின் முறையற்ற செயற்பாடுகள் மற்றும் பதவி அதிகாரங்களை பாரதூரமான வகையில் பயன்படுத்தியமை தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை தொடர்பில் முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் சபைக்கு தெளிவுபடுத்த வேண்டியுள்ளது.

இதன்படி ஜூலை 22ஆம் திகதி சபையில் சமர்பிக்கப்பட்ட அறிக்கையின் ஆங்கில பிரதி அன்றைய தினமே பாராளுமன்ற இணையத் தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது. மேலும் இந்த அறிக்கையை அச்சிட்ட பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த அறிக்கையின்படி தேசபந்து தென்னகோன் குற்றவாளியாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2001/05 ஆம் இலக்க பதவிநிலைகளை நீக்குதல் தொடர்பான ஏற்பாடுகளுக்கமைய 17ஆம் சரத்தின் பிரகாரம் அவரை அந்தப் பதவியில் இருந்து நீக்குவதற்கான யோசனையை பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை பாராளுமன்ற நிலையியல் கட்டளை 27க்கு அமைய இந்த யோசனை பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டு 5 நாட்களின் பின்னர் இது பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படுவதுடன், அது தொடர்பில் பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழுவினால் தீர்மானிக்கப்படும் நாளில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள முடியும்.

இதன்படி பாராளுமன்றத்தில் சமூகமளிக்காத உறுப்பினர்கள் உள்ளடங்கலாக மொத்த பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தால் அவரை பதவி நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பது தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவிக்கப்படும் என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதப் புதைகுழி அகழ்வு; 11.7 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

## இந்திய ஊடகத்திற்கு தெரிவித்த நீதி அமைச்சர்



**(டில்லி)**

**யாழ்ப்பாணம் - செம்மணி, சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளுக்கு அரசாங்கம் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கும் என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

அத்துடன் மனிதப் புதைகுழி அகழ்வுக்காக 11.7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியில் அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் ஒத்துழைப்புடன், அரசாங்கம் தற்போது நாடு முழுவதும் 14 பாரிய புதைகுழிகள் குறித்து ஆராய்ந்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

பேரழிவு மரணங்கள், காணாமல் ஆக்கப்பட்டமை மற்றும் இழப்புகளை அனுபவித்தவர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கான முழுமையான அரசியல் விருப்பம், தற்போதைய அரசாங்கத்திடம் உள்ளது.

அந்தவகையில், மனித புதைகுழி விவகாரத்தில் தீவிர கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் ஹர்ஷன நாணயக்கார சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## பயிற்சி அபிவிருத்தி உதவியாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியினால் பயிற்சி அபிவிருத்தி உதவியாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வட மாகாணம் உள்ளிட்ட மத்திய மாகாணம், கிழக்கு மாகாணம், வட மத்திய மாகாணம், வட மேல் மாகாணம், சப்ரகமுவ மாகாணம், ஊவா மாகா ணம் ஆகியவற்றில் மேற் குறித்த பதவிக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

க.பொ.த சா/தர பரீட்சையில் தமிழ், கணிதம் மற்றும் ஆங்கில மொழி உட்பட ஐந்து பாடங் களில் திறமைச் சித்தியுடன் (C) ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் குறைந்த பட்சம் ஓர் அரச நிறுவனத்திடம் இருந்து பெற்ற விவசாயம் தொடர்பான டிப்ளோமா சான்றிதழ் அல்லது NVQ5 அல் லது அதற்கு சமமான விவசாய பாட நெறியை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். விண் ணப்ப முடிவு திகதி 26.07.2025. (நி)

## நாளாந்தம் விபத்துக்களால் 29 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஏற்படும் திடீர் விபத்துகளால் நாளாந்தம் சராசரியாக 29 பேர் உயிரிழக்கின்றனர் என சமூகநல சுகாதார நிபுணர் வைத்தியர் சமித சிறிதுங்கா தெரிவித் துள்ளார்.

இந்தத் தகவலை, அண்மையில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின் போது, விபத்துத் தடுப்பு குறித்து பேசிய போது வைத்தியர் சிறி துங்கா வெளியிட்டார்.

ஆண்டுக்கு சுமார் 10,600 பேர் திடீர் விபத்துக்களால் உயிரிழக்கின்றனர். இதனுடன், 1,500 பேர் தவறி விழுந்து ஏற்படும் காயங்களால் மரணமடைகின்றனர் என புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த உயிரிழப்புகளைத் தடுக்கும் வழிகள் இருக்கின்றன.

அதற்காக, பொதுமக்கள் அனைவரும் அதிக கவனத்துடன் செயற்பட வேண்டும் என்றும், பாதுகாப்பு நடவடிக்கைகள், விழிப்புணர்வு மற்றும் உரிய தடுப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் மற்றும் சமூக அமைப்புகள் விரைவில் எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

## மருந்து பற்றாக்குறை ஏற்படுவதை தவிர்க்க உடனடி நடவடிக்கை

(கொழும்பு)

மருந்துகளின் கொள்முதல் மற்றும் விநியோகம் குறித்த பொறிமுறையை சரிப்படுத்தி, பற்றாக்குறை மற்றும் தாமதங்களின்றி மக்களுக்கு மருந்துகளைத் தொடர்ச்சியாக வழங்குவதை உறுதி செய்யு மாறு ஜனாதிபதி அதிகாரி களுக்கு வலியுறுத்தியுள் ளார்.

மருந்து கொள்முதல் செயல் முறை மற்றும் விநியோக பொறிமுறையில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமைகள் மற்றும் பலவீனங்கள் குறித்தும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், சில மருத்துவமனைகளில் மருந்து பற்றாக்குறை ஏற்படுவதைத் தவிர்க்க உடனடியாக நடவடிக்கை எடுப்பதுடன், நாட்டில் மீண்டும் இது போன்றதொரு நிலைமை ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதற்குத் தேவையான நீண்டகால திட்டங்களை உடனடியாக தயாரிக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். அத்துடன், மருத்துவமனைகளுக்கு மருந்துகளைப் பெற்றுக் கொள்ளத் தேவையான நிதி ஏற்கனவே திறை சேரியில் இருந்து ஒதுக்கப் பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இதன்போது தெரிவித்துள்ளார். (நி)


ஈராண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி

துளசி அனுசன்

கணித பாட ஆசிரியை

(புனித சவேரியார் பெண்கள் கல்லூரி தேசிய பாடசாலை, மன்னார்)

ஈராண்டு சென்றாலும்-எங்கள்
இல்லத்தரசி நீ இல்லாத - வாழ்வு
நிலையில்லாத நீர் துளியானது-எங்கள்
நினைவில் உன் முகம்
வந்திங்கு வாட்டுதம்மா

அன்னாரின் இரண்டாம் ஆண்டு
பிரார்த்தனை
ஆடி அமாவாசையன்று
அவரின் இல்லத்தில் நடைபெறும்
நன்றி

காந்தியூர்,
புலோலி.

(c-3491)

இங்ஙனம்
குடும்பத்தினர்


## மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து விபத்திற்குள்ளானது

### 16 பேர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

பெலியத்த - வீரகெட்டிய வீதியில் பெலிகல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 16 பாடசாலை மாணவர்கள் காயமடைந்துள்ளதாக பெலியத்த பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்றுப் புதன்கிழமை காலை இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

காயமடைந்த 16 பாடசாலை மாணவர்களும் சிகிச்சைக்காக பெலிகல்ல, தங்காலை மற்றும் வீரகெட்டிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பில் பெலியத்த பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழா நேற்றைய தினம் பல்லாயிரக்கணக்கான பக்த அடியவர்கள் புடைசூழவெகு சிறப்பாக இடம்பெற்றது. (படம்- சிவசாந்தன்)



வறண்ட மண்டல விவசாயம் குறித்த 11 ஆவது சர்வதேச மாநாடு (11 ஆவது ICDA-2025) யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக விவசாய பீட கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. விவசாய பீட பீடாதிபதி பேராசிரியர் க.பகீரதன் தலைமையில் நடைபெற்ற குறித்த மாநாட்டில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் துணைவேந்தர் பேராசிரியர் சிவகொழுந்து ஸ்ரீசற்குணராஜா கலந்து கொண்டார். (படம் தேவானந்தன்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையுடன் மன்னார் மாவட்ட செயலகத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் மன்னார் மாவட்ட மட்டத்திலான ஆடிப்பிறப்பு விழா நிகழ்வுகள் கடந்த 17 ஆம் திகதி வியாழக்கிழமை மன்னார் திருக்கேதீஸ்வரம் கௌரியம்பாள் தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. (படம்-ஜோசப்நயன்)





சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பனிப்புலம் பண்மக்கள் இலவசக் கல்வி கூடத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா பண்மக்கள் இலவசக்கல்வி கூடத்தின் தலைவர் த.றஞ்சனின் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (படம்-சுபேசன்)



தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் அண்மையில் ஆடிப்பிறப்பு மற்றும் அதனையொட்டிய ஆடிக்கூழ் காய்ச்சி பகிர்தல் நிகழ்வு பாடசாலை முதல்வர் தி.அபராஜிதன் தலைமையில் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது. (படம்-சுபேசன்)






முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதி சபாநாயகருமான அமரர்.முருகேசு சிவசிதம்பரத்தின் 102 ஆவது பிறந்த தினம் அன்னாரது உருவச் சிலையிலும், அண்மையில் வீட்டிலும் அனுஷ்டிக்கப்பட்டது. (படம்-மகாலிங்கம்)



கிளிநொச்சி மாவட்ட றோல்வோல் **(RollBall)** சங்கத்தின் ஏற்பாட்டில் 2025 ஆம் ஆண்டின் றோல் வோல் சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது. குறித்த நிகழ்வில் மாவட்ட, மாகாண, தேசிய, சர்வதேச ரீதியில் சாதித்த ஆண், பெண் வீர வீராங்கனைகள் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பித்ரு தோஷம் முதல் கண்ணுக்குத் தெரியாத தோஷங்களையும் நீக்கும் ஆடி அமாவாசை வழிபாடு!



சுபகாரியத் தடைகள், முன்னேற்றம் இன்மை, தொழில் வியாபார விருத்தியின்மை, குடும்பத்தில் அமைதியின்மை ஆகிய சிக்கல்களுக்குக் காரணம் பித்ரு தோஷமே என்கிறது ஜோதிட சாஸ்திரம். நமக்கு உயிரையும் உடலையும் தந்த பெற்றோர்களை அவர்கள் வாழும்போது உரிய மரியாதையோடு நடத்தி அவர்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்ய வேண்டியது ஒவ்வொரு பிள்ளையின் கடமை.

அவர்கள் மறைந்த பிறகு அவர்களுக்கு உரிய ஆராதனைகள் செய்து வழிபட வேண்டியதும் அவசியம். இவற்றைச் செய்யாமல்விட்டு விடும் போது முன்னோர்களின் வருத்தத்துக்கு ஆளாவோம். அவர்களின் மனக் குறையே பித்ரு தோஷமாக நம்மைப் பீடிக்கும்.

ஒருவரின் ஜாதகத்தில் சூரியன் அல்லது சந்திரன், ராகு - கேதுக்களோடு எந்த ஸ்தானத்தில் சேர்ந்திருந்தாலும் அது பித்ரு தோஷத்தைக் குறிக்கும். இப்படிப்பட்ட ஜாதகக்காரர்கள் பித்ரு வழிபாட்டை மிகுந்த கவனத்துடன் செய்துவருவது அவசியம். அவர்கள் மட்டுமல்ல **தந்தையை இழந்த அனைவரும் அமாவாசை நாளில் தர்ப்பணம் செய்து வழிபாடு செய்வது அவசியம்.**

### ஓர் ஆண்டில் எத்தனை தர்ப்பணங்கள் செய்ய வேண்டும்?

ஓர் ஆண்டுக்கு 96 முறை தர்ப்பணம் செய்ய வேண்டும் என்கிறது வேதம். ஆனால் இன்றைய அவசர யுகத்தில் அனைவராலும் இதைக் கடைப்பிடிக்க முடியாது. எனவே 12 மாதங்களிலும் வரும் 12 அமாவாசை நாள்களில் தர்ப்பணம் செய்ய வேண்டும் என்கிறார்கள் பெரியோர்கள்.

ஆனால் அதுவும் சாத்தியம் இல்லை என்பவர்கள் குறைந்த பட்சம் மூன்று அமாவாசைகளைத் தவற விடக்கூடாது. ஆடி, புரட்டாசி, தை ஆகிய மாதங்களில் வரும் அமாவாசை நாள்களிலாவது தர்ப்பணம் செய்து வழிபட்டால் பித்ரு தோஷம் ஏற்படாது என்கிறார்கள்.

### தர்ப்பணம் செய்யும் முறை

தர்ப்பணம் செய்ய மொத்தம் 16 தர்ப்பைகளைப் பயன்படுத்த வேண்டும்.

அவற்றில் 8 தர்ப்பைகளைக் கொண்டு செவ்வக வடிவில் கட்டம் அமையுங்கள். பிறகு, 5 தர்ப்பைகளை கூர்ச்சமாகச் செய்துகொள்ள வேண்டும். நடுவில் முடிச்சுடன் கூடியது. மூன்று நுனி தர்ப்பைகளைப் பயன்படுத்தி பவித்ரம் (மோதிரம் போன்று) செய்துகொள்ள வேண்டும். இவை போக இன்னும் இரண்டு குட்டையான தர்ப்பைகளைக் கையில் இடுக்கிக்கொண்டு பவித்ரத்தையும் அணிந்து கொண்டு தர்ப்பணத்துக்குத் தயாராக வேண்டும்.

இவை தவிர, காலுக்குக் கீழே ஆசனம் என்ற பெயருக்கு உதிரி தர்ப்பைகளைப் போட்டுக்கொள்வது விதி.

இன்றைக்குக் கடைகளில் இவற்றை ஒரு செட்டாகவே விற்கிறார்கள். அதை அப்படியே வாங்கிப் பயன்படுத்தலாம்.

### எந்த திசை?

ஆடி அமாவாசை, தை அமாவாசை, மஹாளய அமாவாசை முதலான காலங்களில், பெரும்பாலும் சூரியன் உதிக்கும் கிழக்கு திசை நோக்கி அமர்ந்து தர்ப்பணம் செய்வதே வழக்கம். எனினும் தெற்கு நோக்கி அமர்வது சிறப்பு.

திசைகளில் கிழக்கு தேவர்களுக்குரியது. மனிதர்கள் மேற்கை எடுத்துக் கொண்டனர். வடக்கை ருத்ரர்களும், தெற்கை பித்ருக்களும் எடுத்துக்கொண்டனர். அத்துடன், பித்ருக்கள் உலகின் தலைவனான எமதர்மனின் சம்யமினீ என்ற அரசாங்கம் தெற்கில் உள்ளதால், பித்ரு பூஜையை தென்முகம் நோக்கிச் செய்ய வேண்டும்.

### தர்ப்பணம் சங்கல்பம்

அமாவாசை நாளின் வாரம் (கிழமை), நட்சத்திரம் சொல்லி, கலசத்தில் உள்ள நீரில் கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதை, சிந்து, காவிரி, தாமிரபரணி ஆகிய புண்ணிய நதிகள் எல்லாம் எழுந்தருளும்படி வேண்டிக்கொள்ள வேண்டும்.

பிறகு தர்ப்பணத்துக்குரிய சங்கல்பம் செய்ய வேண்டும். பிறகு

**"தேவர்களே, பித்ருக்களே, மகரிஷிகளே தர்ப்பையில் அமர்ந்திடுக"**

என்று கூறி மும்முறை எள் இட வேண்டும். அடுத்து,

**"தேவர்களே உங்களுக்குத் தர்ப்பணம் விடுகிறேன்**

**பிரம்மனே உமக்குத் தர்ப்பணம் விடுகிறேன்**

**மகரிஷிகளே உங்களுக்குத் தர்ப்பணம் விடுகிறேன்"**

என்று கூறி மூன்று முறை விரல் நுனி வழியாக தர்ப்பணம் இட வேண்டும்.

பின்னர்...

**அப்பா - அப்பாவுக்கு அப்பா- அப்பாவின் தாத்தா ஆகியோரின் பெயரைச் சொல்லி, கோத்திரம் சொல்லி எள்ளும் நீரும் விட வேண்டும்.**

**அதேபோல் அம்மா வழிக்கும் தர்ப்பணம் இட வேண்டும். இதில் அம்மா, தந்தையின் அம்மா, தாத்தா வின் அம்மா ஆகியோரது பெயர்களைக் குறிப்பிட்டுத் தர்ப்பணம் இட வேண்டும்.**

அடுத்து, ஆத்ம பிரதட்சணம் (வணங்கியபடியே தன்னைத்தானே சுற்றுவது) செய்ய வேண்டும். பின்னர், தர்ப்பையைப் பிரித்துவிட்டு, எள் - நீர் வைத்துக்கொண்டு...

**"இந்தத் தர்ப்பணத்தின் மூலம் என் தாய் - தகப்பன், உறவினர்கள், கோத்திர வழி வந்த அனைவரும்... நான் விடும் எள் நீரால் பரம திருப்தியடைந்து என்னை ஆசீர்வதிக்கட்டும்" என்று மனதாரப் பிராத்தனை செய்து கொள்ள வேண்டும்.**

அந்தணரை அழைத்துச் செய்பவர்கள் அவரின் வழிகாட்டுதலின் படி செய்யலாம்.

### தானமும் ஆடி அமாவாசையும்

வீட்டில் தாமே தர்ப்பணம் செய்து கொண்டாலும் தானம் கொடுப்பது அவசியம். நாம் அளிக்கும் தானம் முன்னோர்களின் மனதைக் குளிர்விக்கும். வஸ்திர தானம் செய்தால் செல்வ வளம் சேரும். காய்கறிகள் தானம் செய்தால் வாழ்வில் அன்னத்துக்குக் குறைவே வராது. திருமணத்துக்கு உதவி தேவைப்படும் ஏழைப் பெண்ணுக்கு தங்கத்தில் திருமாங்கல்யம் வாங்கி தானம் கொடுத்தால் தீர்க்க சுமங்கலி பாக்கியம் கிட்டும் என்பது நம்பிக்கை.

"தடுமாறியவனுக்கு தை அமாவாசை, ஆட்டம் கண்டவனுக்கு ஆடி அமாவாசை மறந்துவிட்டவனுக்கு மஹாளய அமாவாசை' என்றொரு சொல்வழக்கே உண்டு. ஆக, இந்தப் புண்ணிய தினங்களிலாவது நம் முன்னோர்களை நினைத்து, அவர்களுக்கு உரிய ஆராதனையை உளமாரச் செய்து அவர்களது ஆசியையும் அருளையும் ஒருங்கே பெற்று மகிழ்வோம்.

### தர்ப்பணம் செய்ய உகந்த நேரம்

பொதுவாக ஆடி அமாவாசை நாளில் நதிக்கரைகளிலும் சமுத்திரக்கரைகளிலும் கூட்டம் அலைமோதும். எனவே அதிகாலையிலேயே சென்று தர்ப்பணம் செய்து வந்துவிடலாம் என்று பலரும் நினைப்பதுண்டு. அதில் தவறில்லை என்றாலும் தர்ப்பணம் செய்வதற்கு உகந்த நேரங்களை நம் முன்னோர்கள் வகுத்திருக்கிறார்கள்.

காலை 8.30 மணிக்குப் பிறகு செய்வது நல்லது. காலை 10.30 மணிக்குப் பின் செய்வது உத்தமம். உச்சி வேளையில் செய்வது விசேஷம். எனவே அவரவர் அவரவருக்கு வசதியான நேரத்தில் பித்ரு காரியங்களைச் செய்து முடிப்பது நல்லது. எக்காரணம் கொண்டும் இந்த நாளைத் தவறவிடக் கூடாது.

அமாவாசை நாளில் முன்னோர் வழிபாட்டை முடித்தபிறகு அவர்களின் நினைவாக ஸ்தோத்திர பாராயணங்களைச் செய்யலாம். அப்படிச் செய்வதன் மூலம் இறை அருளும் பித்ருக்களின் ஆசியும் நம் அனைவருக்கும் கிடைக்கும். வாழ்க்கை வளமாகும்.

## இராசிபலன்

24.07.2025
ஆடி 08, வியாழக்கிழமை
அமாவாசை பின்னிரவு 1.52 மணிவரை

புனர்பூசம் பிற்பகல் 6.17 மணிவரை
சுப நேரம் 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை
ஆடி அமாவாசை விரதம்

சந்திராஷ்டமம்
கேட்டை,மூலம்.

வளவன்

**மேஷம்** புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பிள்ளைகளின் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**ரிஷபம்** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** வழிபாடு காரிய வெற்றி தரும், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

**கடகம்** கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்** தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தேவையற்ற மனச் சஞ்சலங்களை தவிர்ப்பது நல்லது, திடீர் பயணங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**கன்னி** செல்வ நிலை உயரும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**துலாம்** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்** பொது வாழ்வில் புகழ் கூடும், சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு.

**தனுசு** தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம், குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**மகரம்** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், நட்பு வட்டம் விரிவடையும் நாள், களஸ்திர நன்மையுண்டு.

**கும்பம்** உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, நம்பிக்கைகள் நடைபெற குல தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**மீனம்** பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும் தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

விடா முயற்சியை கடல் அலைகளிடம் கற்றுக் கொள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று புதன்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்காக மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். (படம்: சிவசாந்தன்)

## ஐ.நா மக்கள் தொகை நிதியப் பிரதிநிதிகள்
# அரசாங்க அதிபர் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை நிதியப் (UNFPA) பிரதிநிதிகள் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனை நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இச் சந்திப்பில் ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை நிதியத்தின் பெண்கள் மற்றும் இளைஞர் மேம்பாட்டு நிபுணர் மக்கி சக்கியமா, திட்ட ஆய்வாளர் ருக்சன் லொவல், Development Trust Alliance இன் சமூக நீதிப் பிரிவின் தலைவர் சாரா ஆறுமுகம் மற்றும் திட்ட உத்தியோகத்தர் ஜீன் இராஜேந்திரன் ஆகியோர் பங்கு பற்றினார்கள்.

இக் கலந்துரையாடலில் விவசாயம் மற்றும் மீன்பிடி துறையில் ஈடுபடும் 25 பெண்கள் மற்றும் இளைஞர் யுவதிகளை தெரிவு செய்து அவர்களை வலுப்படுத்தி தேசிய ரீதியிலான வியாபாரத்துடன் இணைப்பதற்கான செயற்றிட்டத்தினை மேற்கொள்வது தொடர்பாக ஆராயப்பட்டு, சண்டிலிப்பாய் மற்றும் யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து பொருத்தமான பயனாளிகளை தெரிவு செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன் மற்றும் உதவி மாவட்ட செயலாளர் உ.தர்சினி ஆகியோரும் பங்குபற்றியிருந்தார்கள். (8-33)

## வீதி மின் விளக்குகள் பொருத்துதல்;
# 38 பேருக்கு பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு, உள்ளூராட்சிசபைகளுக்கு உட்பட்ட பகுதிகளில் வீதி மின் விளக்குகளை பழுது பார்த்தல் மற்றும் புதிதாக பொருத்துதல் தொடர்பில் முதல் கட்டமாக 38 பேருக்கு பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவநந்தினி பாபு தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களின் செயலர்களுடனான மாதாந்தக் கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

அக்கலந்துரையாடலின் போதே அவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், மின்கம்பங்களில் ஏறி மின் விளக்குகள் பொருத்துதல் மற்றும் திருத்துதல் ஆகிய பணிகளைச் செய்வதற்கு உள்ளூராட்சி மன்றங்களால் வழங்கப்பட்ட 38 பணியாளர்களின் பெயர்ப்பட்டியல் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. விரைவில் அவர்களுக்கான பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும்.

தொடர்ந்து ஏனையோருக்கு அடுத்த கட்டமாக பயிற்சிகள் வழங்கப்படும்.

மேலும், உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கான பயிற்சிகள் வழங்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (8-33)

## நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில்
# கண்காணிப்பு கமராக்கள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் பொது இடங்களில் கழிவுகளை வீசும் செயற்பாடுகளை கண்காணிப்பதற்காக கண்காணிப்பு கமராக்கள் (cctv) நிறுவப்பட்டுள்ளன. சுற்றுச்சூழலையும் பொதுச் சுகாதாரத்தையும் பேணுவதற்காக சுகாதார விதிமுறைகளை மீறி பொது இடங்களில் கழிவுகளை வீசுபவர்களை கண்காணிக்கவே அவை பொருத்தப்பட்டுள்ளன.

கமரா பதிவுகளின் ஆதாரங்களின் பிரகாரம் கழிவுகளை வீசுபவர்களுக்கு எதிராக பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நல்லூர் பிரதேச சபை தவிசாளர் பத்மநாதன் மயூரன் அறிவித்துள்ளார். (8-33)

# புத்தக அரங்க விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு "நூறு மலர்கள் மலரட்டும்" என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் இருபத்தாறாவது நிகழ்வு இம் மாதம் 25, 26, மற்றும்27 ஆம் திகதிகளில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இப் புத்தக அரங்க விழாவின் தொடக்க நிகழ்வாக "ஈழத்து நூல்களை அறிவோம்" என்ற தொனிப்பொருளில் நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் பேராசிரியர் சி.தில்லைநாதன் நினைவு அரங்கில் ஓய்வுபெற்ற கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் கலாநிதி ந. இரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் நூல்களின் அறிமுக உரைகளை ச.பூபாலப்பிள்ளையின் "தமிழ் வரலாறு" நூல் பற்றி ஆசிரியரும் ஆய்வாளருமான சி. ரமேஸ், க.பாலேந்திராவின் "பிரத்தியேகக் காட்சி" நாடகப் பிரதிகளின் தொகுப்பு நூல் தொடர்பாக சட்டத்தரணி சோ.தேவராஜா ஆற்றவுள்ளதுடன், நிகழ்ச்சித் தொகுப்பினை மாணவர் சந்திரகுமார் சஞ்ஜய் மேற்கொள்ளவுள்ளார்.

மேலும், இந் நிகழ்வின் விசேட அம்சமாக மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரண்டு தினங்களும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜை என்பன நடைபெற்று விநாயகப் பெருமானின் திருவீதியுலாவும் இடம்பெறவுள்ளதென ஆலய ஆதீன கர்த்தாவும் பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (3)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் (ஐயனார்) ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6 மணி முதல் 10.30 மணி வரையுள்ள சுப நேரத்தில் கொடியேற்ற உற்சவத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாட்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத்திருவிழாவும், 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளதென ஆலய தர்மகர்த்தா [illegible] அறிவித்துள்ளார். (3)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 350 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 250 | 500 | 280 | 400 |
| தக்காளி | 200 | 200 | 200 | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 350 | 300 | 300 | 300 | 200 |
| கோவா | 300 | 450 | 400 | 250 | 400 |
| கரட் | 400 | 500 | 500 | 350 | 500 |
| பூசணி | 100 | 140 | 150 | 120 | 150 |
| புடோல் | 100 | 100 | 150 | 100 | 150 |
| வாழைக்காய் | 150 | 120 | 120 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 400 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 120 | 110 | 150 |
| பாகற்காய் | 600 | 450 | 450 | 600 | 600 |
| வெண்டக்காய் | 150 | 120 | 150 | 80 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 300 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 800 | 700 | 1000 | 1000 | 800 |
| லீக்ஸ் | 350 | 280 | 350 | 230 | 300 |
| பீற்றூட் | 200 | 200 | 250 | 120 | 200 |
| கறிமிளகாய் | 600 | 650 | 500 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 500 | 300 | 400 |
| போஞ்சி | 600 | 650 | 500 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 250 | -- | 240 |
| கீரை - 1 பிடி | 100 | 80-120 | 150 | 60 | 120 |
| தேசிக்காய் | 250 | 200 | 250 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 80-140 | 140-180 |
| இராசவள்ளி | 800 | 700 | 500 | 500 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 500 | 250 | 400 |
| முள்ளங்கி | 150 | 120 | 200 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | -- | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு ஒப்பந்தத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்

## வைகோ வலியுறுத்து



**(சென்னை)**

**கச்சதீவு ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்து கச்சதீவை திரும்பப் பெற வேண்டும் என மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் வைகோ இந்திய பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவதும் கைது செய்யப்படுவதும் ஆண்டுதோறும் அதிகரித்து வருகின்றன. 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து இது வரை கைது செய்யப்பட்ட மீனவர்களின் எண்ணிக்கை 150 ஆகவும் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளின் எண்ணிக்கை 20 ஆகவும் உயர்ந்துள்ளன.

இதனால் மீனவ குடும்பத்தினர் பெரும் நிதி நெருக்கடியை சந்தித்து வருகின்றனர். அவர்கள் பெரும்பாலும் தங்கள் உறவினர்களை விடுவிப்பதற்காக பெரிய அபராதங்களை கட்ட வேண்டிய சூழல் ஏற்படுகின்றது.

அண்மையில் 13.07.2025 அன்று ஆறு இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். மேலும் அவர்களின் மோட்டார் பொருத்தப்பட்ட மீன்பிடி படகுகளும் பறிமுதல் செய்யப்பட்ட கொடூரம் நடைபெற்றுள்ளது.

தமிழக மீனவர்களின் பாரம்பரிய உரிமைகளைப் பறிக்கும் வகையில் இலங்கை கடற்படை தொடர்ந்து அத்துமீறி வருகிறது. இது இந்திய ஒன்றிய அரசுக்கு பெரும் சவாலாக உள்ளது. அடிக்கடி தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதாலும் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதாலும் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றன.

எனவே கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் நிபந்தனையின்றி உடனடியாக விடுவிக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறேன்.

எதிர்காலத்தில் மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுக்கவும் மீனவ சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாக்கவும் ஒன்றிய அரசு தீர்வுகாண வேண்டும்.

தொடர்ச்சியான கைதுகள் மீனவர்களுக்கு நெருக்கடியை உருவாக்குவது மட்டுமல்லாமல் பாக் விரிகுடா பகுதியில் மீன்பிடிப்புத் தொழிலையும் கேள்விக்குள்ளாக்குகிறது. மீன்பிடி தொழிலின் நீண்டகால நிலைத்தன்மைக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்துகின்றது.

கடந்த 10 ஆண்டுகளில் இலங்கை கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் மற்றும் படகுகள் சேதமடைந்தவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு இழப்பீடு மற்றும் நிவாரணம் வழங்குவதற்கு இலங்கை அரசிற்கு இந்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும். கச்சதீவு ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்து கச்சதீவை திரும்பப் பெற வேண்டும் என ஒன்றிய அரசை வலியுறுத்துகிறேன் என அவர் தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1990- இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி-பா-37
உயரம்: 6"
தகைமை/தொழில் : Bio Medical Engineer (USA)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண் (USA)
தொ.இ: B/15852

பிறப்பு:1997-இந்து
நட்சத்திரம்:உத்தரம்
உயரம்:5'8"
தகைமை/தொழில்- A/L.பிரான்ஸ்
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: B/15853

பிறப்பு:1986-இந்து
நட்சத்திரம்:ரோகினி
உயரம்:5'6"
தகைமை/தொழில்:A/L,Business
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15857

பிறப்பு: 1989- இந்து
நட்சத்திரம்:திருவோணம்
உயரம்:5'9"
தகைமை/தொழில் - O/L,Driver
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15858

பிறப்பு: 1996- இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி-பா-16
12இல் செவ்
உயரம்:5'5"
தகைமை/தொழில்: BA,MBA,Banker
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15859

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1988-இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
12இல்செவ்
கி-பா- 46
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L, Assistant Nursing
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15830

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்-ஆயிலியம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Accountant(france)
எதிர்பார்ப்பு: வெளிநாடு (france)
தொ.இ: G/15832

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்- புனர்பூசம்
2இல்செவ்
உயரம்-5'5"
தகைமை/தொழில்: BA, ஆசிரியர்(PVT)
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/15835

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா-28 1/2
உயரம்: 5'3"
தகைமை/தொழில் - அரசதொழில் (பிரான்ஸ்)
எதிர்பார்ப்பு: வெளிநாடு (பிரான்ஸ்)
தொ.இ: G/15836

பிறப்பு-1989-RC
நட்சத்திரம்:உத்தரட்டாதி
10இல்சூரிசெவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில் - Doctor
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15838

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை : பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்
விண்ணப்பதாரரின் பெயர் : மிக்கேல் பாக்கியராசாவுக்கும் பெண் ஜெயராணிக்கும்
சபை ஆதனவரி பதிவேட்டின்படி பெயர் : புதிய பதிவு
முகவரி : சென் பற்றிமா டச்சு வீதி, பண்டத்தரிப்பு, வட்டாரம் - 04

வட்டாரம் 04, சென் பற்றிமா டச்சு வீதி இல் அமைந்துள்ள ஆதனம் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் 7720/2006.02.08 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதிப்பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்கு பகுதி பண்டத்தரிப்பு கோவில்பற்று பண்டத்தரிப்பு இறை "காரையம்புலம்" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 16 விஸ்தீரணமுள்ள ஆதனத்தை "இவ் ஆதனம் எனது பேரனார் மூத்தவி சின்னத்தம்பிக்கு உரியதாக இருந்தது என்றும் 1967இல் அவர் காலஞ் செல்ல அவரது மகனும் தனது தந்தையுமாகிய சின்னத்தம்பி சின்னத்துரைக்கு தந்தை வழி முதுசமாக வந்தடைந்தது எனவும் தனது சகோதரன் வெளிநாட்டுக்கு சென்று தங்கிக்கொண்டமையினால் முழு ஆதனத்தையும் தன்னிடம் ஒப்படைத்து 1983 ஆம் ஆண்டு தந்தையார் காலமாகி விட்டார் எனவும் ஒப்படைத்த காலம் முதல் இக்காலம் வரைக்கும் தானே பராமரித்து வருகிறேன்." எனவும் சின்னத்துரை மகேந்திரன் வெளிப்படுத்தி வெளியரங்கப்படுத்தி பிரகடனப்படுத்திக் கொண்டுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிசு இ.த.அன்ரன் பாலசிங்கம் முகதாவில் எழுதப்பட்ட 5698/2016.05.26 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் மிக்கேல் பாக்கியராசாவுக்கும் பெண் ஜெயராணிக்கும் வந்தடைந்தது.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் S.சிவராஜா அவர்களால் வரையப்பட்ட 343 ஆம் இலக்க 2016.05.21 ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 2 குளி பூச்சியம் கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு

வடக்கு - இன்னாசிமுத்து விமல்ராஜ் இன் ஆதனம்
கிழக்கு - இராஜரத்தினம் ஜெகநாதனுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம்
மேற்கு - 1 ஆம் துண்டாக சுட்டப்பட்ட பாதை 4 மீற்றர் அகலமுள்ளது.
தெற்கு - மிகுதி ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை மிக்கேல் பாக்கியராசாவுக்கும் பெண் ஜெயராணிக்கும் என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில் விண்ணப்பதாரரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன். (4876)

**தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,மானிப்பாய்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## யுனெஸ்கோ உறுப்புரிமை; விலகும் அமெரிக்கா




(வோஷிங்டன்)
ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோவின் உறுப்புரிமையில் இருந்து விலகுவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கு எதிரான நிலைப்பாடு மற்றும் பிரிவினைவாதத்தை ஊக்குவிப்பதன் காரணமாகவே, இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

யுனெஸ்கோவின் தொடர்ச்சியான ஈடுபாடு, அமெரிக்காவின் தேசிய நலன்களைப் பூர்த்தி செய்யவில்லை என்று, அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பேச்சாளர் டாமி புரூஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் 2017 ஆம் ஆண்டு தமது முதலாவது பதவிக்காலத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பிலிருந்து விலகுமாறு உத்தரவிட்டிருந்தார்.

எனினும், அதனை யடுத்து அமெரிக்காவில் ஆட்சிக்கு வந்த ஜோ பைடன், அந்த உறுப்புரிமையை மீண்டும் நிலை நாட்ட நடவடிக்கை எடுத்திருந்தார்.

இந்த நிலையில், மீண்டும் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுள்ள ட்ரம்ப், ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பிலிருந்து விலகுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி)

## உங்கள் பொருளாதார...

## இந்தியா, சீனாவுக்கு ...

**(வோஷிங்டன்) ●●●●●●●●●●●● ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதை நிறுத்தாவிட்டால், இந்தியா மற்றும் சீனாவின் பொருளாதாரத்தை வரி விதித்து நசுக்குவோம் என, அமெரிக்கக் குடியரசு கட்சி எம்.பி லிண்ட்சே கிரஹாம் மிரட்டல் விடுத்துள்ளார்.**

ரஷ்யா - உக்ரைன் இடையே 2022இல் தொடங்கிய போர் இன்று வரை நீடிக்கிறது. இதனால் ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பல பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.

இதற்கிடையே அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இந்தப் போரை நிறுத்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் பல முறை தொலைபேசி வாயிலாக பேச்சு நடத்தினார். அதில் பிடிகொடுக்காமல் நழுவி விட்டார் புடின்.

இதனால் உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலை நிறுத்துவதற்காக, அந்நாட்டின் பொருளாதாரத்தை பலவீனப்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா இறங்கியுள்ளது.

ரஷ்யாவிடம் ஏராளமான கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு வளங்கள் உள்ளன. இதில் பெரும்பகுதி தற்போது இந்தியா, சீனா மற்றும் பிரேசில்



## போரை உக்ரைன் விரும்பவில்லை புடினை சந்தித்து பேசத் தயார்!

### உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவிப்பு

**(கீவ்) ---------------------------- போரை முடிவுக்கு கொண்டுவர, ரஷ்ய ஜனாதிபதி புடினை நேரில் சந்தித்து பேசத் தயாராக இருக்கிறேன்" என உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.**

உக்ரைன் மீது தொடர்ந்து ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்காக ரஷ்யா மீது இன்னும் பொருளாதார தடைகளை விதிக்க வேண்டும் என உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கூறி வருகிறார். அதே நேரத்தில், பேச்சு வார்த்தை மூலம் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் போர் நிறுத்தம் கொண்டுவர முயற்சி செய்கிறார்.

இந்நிலையில், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கூறியதாவது: போரை முடிவுக்கு கொண்டுவர, ரஷ்ய ஜனாதிபதி புடினை நேரில் சந்தித்து பேச தயாராக இருக்கிறேன்.

உக்ரைன் இந்த போரை ஒருபோதும் விரும்பவில்லை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ாரத்தை நசுக்குவோம்

# அமெரிக்கா மிரட்டல்



ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இதன் வாயிலாக வரும் வருவாயை வைத்து, ரஷ்யா தொடர்ந்து போரில் ஈடுபடுவதாக கூறப்படுகிறது.

இதனால், "ரஷ்யாவுடன் வர்த்தககம் செய்யும் நாடுகள் அதை உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லையென்றால், 100 சதவீத வரி விதிப்பை எதிர்கொள்ள நேரிடும்" என கடந்த வாரம் ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் நேட்டோ அமைப்பின் பொதுச் செயலர் மார்க் ருட்டே எச்சரித்தனர்.

இந்நிலையில், அமெரிக்காவின் ஆளும் குடியரசு கட்சியின் மூத்த எம்.பி. லிண்ட்சே கிரஹாம், ரஷ்யாவுடன் இந்தியா, சீனா ஆகிய நாடுகள் வர்த்தக உறவை நிறுத்தவில்லை எனில், அந்நாடுகளின் பொருளாதாரத்தை அழிப்போம், என, "டிவி சேனல்" ஒன்றுக்கு அளித்த பேட்டியில் பகிரங்கமாக மிரட்டல் விடுத்துள்ளார். (நி)

---

மேலும் போரை தொடங்கிய ரஷ்யா தான் முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக, ரஷ்ய அதிகாரிகள் கூறியதாவது:

உயர்மட்ட சந்திப்புகளுக்கு தேவையான ஏற்பாடுகளை செய்வதற்கு முன்பு, நிறைய வேலைகள் செய்ய வேண்டும்.

இது தொடர்பாக, விரைவில் ஒரு உச்சி மாநாடு நடைபெறும். ரஷ்யா தற்போது உக்ரைனில் பல்வேறு பகுதிகளை தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளது என தெரிவித்தார்.




ட்ரம்ப் நிர்வாகம் அமைதி முயற்சிகளை முன்னெடுக்க முயற்சித்த போதிலும், புடின் பேச்சுவார்த்தை நடத்த உடன்படவில்லை.

ரஷ்யப் படைகள் நேற்று இரவில் உக்ரைனில் பல்வேறு இடங்களில் வான்வழி தாக்குதல் நடத்தியது என்பது குறிப்பிடத் தக்கது (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜப்பானுடன் அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம்



(டோக்கியோ)

ஜப்பானுடன் வர்த்தக ஒப்பந்தம் ஒன்று நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை எட்டப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

புதிய ஒப்பந்தத்தின் படி, ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு முன்னர் விதித்திருந்த 25 சதவீத வரியை 15 சதவீதமாக அமெரிக்கா குறைத்துள்ளது.

எனது வழிகாட்டுதலின் கீழ் ஜப்பான் அமெரிக்காவில் 550 பில்லியன் டொலர்களை முதலீடு செய்யும் எனவும், அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படும் கார் மற்றும் அரிசி உள்ளிட்ட குறிப்பிட்ட சில பொருட்களை ஜப்பானில் இனி விற்பனை செய்யலாம் என டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் இலட்சக்கணக்கான வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதோடு, இது போன்ற எதுவும் இதற்கு முன்பு நடந்ததில்லை என ட்ரம்ப் ட்ரூத் சோஷியலில் பதிவிட்டுள்ளார்.

அமெரிக்கா "ஜப்பான் நாட்டுடன் எப்போதும் சிறந்த உறவைக் கொண்டிருக்கும்" எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## பாலத்தில் மோதிய இரட்டைத்தட்டு பேருந்து

### லண்டனில் நடந்த கோரக் காட்சி

(லண்டன்)

பாலத்திற்கு கீழுள்ள வீதியில் பயணித்துக் கொண்டிருந்த இரட்டைத் தட்டு பேருந்து ஒன்று பாலத்தில் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

இந்த பயங்கர விபத்து லண்டன் மான்செஸ்டர் பகுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

மான்செஸ்டர் பகுதியில் பயணித்துக்கொண்டிருந்த இரட்டைத் தட்டு பேருந்து, அங்கிருந்த பாலத்திற்கு அருகில் பயணித்த வேளை பாலத்தின் மேற்தளத்தில் விளிம்புடன் உரசி விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தின் போது பேருந்தில் இரண்டாவது அடுக்கில் பயணித்த பயணிகள் பலத்த காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் இரட்டைத் தட்டு பேருந்தின் மேல் தளம் முழுவதுமாக சிதறியதில், இரண்டாவது அடுக்கில் இருந்த பயணிகள் பலத்த காயமடைந்தனர்.

கிட்டத்தட்ட பயணிகள் 20 பேர் தலையில் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பாலம் இருப்பது தெரிந்தும் பேருந்தை கவனக்குறைவாக இயக்கியதற்காக பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

பாலத்தின் மேற்தளத்தின் விளிம்புடன் இரட்டைத் தட்டு பேருந்து மோதிய பயங்கரமான காணொளி வெளிவந்து அனைவரையும் ஒரு கணம் உலுக்கியுள்ளது எனலாம். (நி)

# சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவு சங்கம (வ-து)
## சாவகச்சேரி கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் திருத்தம் செய்யப்பட்ட1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகக் கடமை புரியும் திரு கிறகோரி சந்திரசேகரன் ஆகிய எனக்கு கையளிக்கப்பட்டு 2021.07.01 ஆம் திகதிய 2234/39 ஆம் இலக்கமுடைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட அரச வர்த்தமானி மூலமாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கு அமைவாக மேற்படி சங்கத்தின் 23 கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப்பொதுச்சபை கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராக கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்ளைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- இதற்கமைய இக்கூட்டங்களில் சமூகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- கிளைப்பொதுச் சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமூகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4)பங்கினர் அல்லது 25 பேர் எது குறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச் சபையைக் கோருவார். இவர்களுள் ஆகக் குறைந்தது இருவர் (02) 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் (09) ஒன்பது பேருக்கும் மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்ளுவார்.
- இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்
- கிளைக்குழுத்தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையில் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச்செயலாளருக்கும் , ஆணையாளருக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

**கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரம் 27.07.2025 - ஞாயிற்றுக்கிழமை - காலை-10.00 மணி**

| கிளை இல | கிளையின் பெயர் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடங்களின் விபரம் | தவிசாளர் பெயர் |
|---|---|---|---|
| 01 | தென்மராட்சி | செருக்கல் பிள்ளையார் வீதியில் உள்ள J/300 கிராமசேவகர் அலுவலகம் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபத்தில் | திருமதி. ஞானசீலன் ஜெயாமேரி கொன்சி |
| 02 | சாவகச்சேரி தெற்கு | நுணாவில் கிழக்கு J/306 கிராமசேவையாளர் அலுவலகம் .பழைய பொலிஸ்நிலைய வீதி | திருமதி. சிறீகுமரன் இமெல்டா |
| 03 | நுணாவில் கிழக்கு | நுணாவில் மத்தி J/307 கிராமசேவையாளர் அலுவலகம் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபம் | திரு.இராஜசிவம் தனுசன் |
| 04 | நுணாவில் ஜோதி | நுணாவில் மேற்கு J/308 கிராமசேவையாளர் அலுவலகம் | திரு.பாலச்சந்திரன் பாலரவி |
| 05 | கைதடி நுணாவில் | கிளைக்கட்டிட முன்றலில் | திரு. சந்திரலிங்கம் சுவர்ணன் |
| 06 | மீசாலை கிழக்கு | மீசாலை கிழக்கு J/318 கிராமசேவையாளர் அலுவலகம் அமைந்துள்ள கிராம அபிவிருத்திச் சங்க கட்டிடம் | திரு.கணேஸ் சுரேஸ்[illegible] |
| 07 | வேரக்கேணி | இலுப்பையடி வீதி மட்டுவில் தெற்கு கலைவாணி சனசமூக நிலையம் | திரு.சிங்கராசா சியாந்தன் |
| 08 | மலர்மகள் | மட்டுவில் தெற்கு கலைமகள் சனசமூக நிலையம் | திரு.அமிர்தானந்தசிவம் சஞ்சயன் |
| 09 | சோமஸ்கந்தா | கிளைக்கட்டிட முன்றலில் | திரு.அந்தோனிப்பிள்ளை ஜேம்சன் |
| 10 | மட்டுவில் வடக்கு | மட்டுவில் வடக்கு கண்ணகை சனசமூக நிலையம் | திரு. சற்குணசிங்கம் பிறேமிலன் |
| 11 | சரசாலை மட்டுவில் | கிளைக்கட்டிட முன்றலில் | திரு. வடிவேல் கிரிசாந் |
| 12 | சரசாலை தெற்கு | கிளைக்கட்டிட முன்றலில் | திரு.வீரசிங்கம் இரத்தினகாந்தன் |
| 13 | சரசாலை வடக்கு | கிளைக்கட்டிட முன்றலில் | திரு.சோமசுந்தரம் துங்கேஸ்வரன் |
| 14 | மோகனதாஸ் | கிளைக்கட்டிட முன்றலில் | திரு. தங்கராசா கண்ணதாசன் |
| 15 | கல்வயல் | கிளைக்கட்டிட முன்றலில் | திரு. விநாசித்தம்பி சிவபாலன் |
| 16 | சாவகச்சேரி வடக்கு | மட்டுவில் J/304 கிராமசேவையாளர் அலுவலகம் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபம் | திரு.பாலசுப்பிரமணியம் பாலவரதன் |
| 17 | வேம்பிராய் | மீசாலை வடக்கு சுடரொளி சனசமூக நிலையம் | திரு.சிவசிதம்பரம் சிறீதரன் |
| 18 | மீசாலை வடக்கு | கிளைக்கட்டிட முன்றலில் | திரு.மயில்வாகனம் கபிலன் |
| 19 | மீசாலை மேற்கு | கிளைக்கட்டிட முன்றலில் | திரு.இராசரத்தினம் வேல்குமார் |
| 20 | சாவகச்சேரி வடகிழக்கு | மீசாலை கிழக்கு சித்திரவேலாயுதர் திருப்புகழ் மண்டபம் | திரு.கனகரத்தினம் திசாகரன் |
| 21 | சங்கத்தானை | கிளைக்கட்டிட முன்றலில் | திரு.அருளானந்தம் தயாளன் |
| 22 | சப்பச்சிமாவடி | கிளைக்கட்டிட முன்றலில் | திரு.நாகமுத்து ஜெயவதனன் |
| 23 | கோயில் குடியிருப்பு | கிளைக்கட்டிட முன்றலில் | திரு.பொன்னம்பலம் கோகுலன் |

குறிப்பிட்ட கிளைகளின் கூட்டங்களுக்குச் சமூகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனினும் எவரேனும் கூட்டத்திற்கு சமூகமளிப்பதற்கு தகுதியுள்ள தனிப்பட்ட அறிவித்தல் கிடைக்காது விடினும் இந்த அறிவித்தலை அடிப்படையாக கொண்டு தமக்குரிய கிளையின் கிளைப்பொதுச்சபை கூட்டத்திற்கு சமூகமளிக்க முடியும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**கூ.அ.உ.ஆணையாளர் அலுவலகம்**
**857, கே..கே.எஸ். வீதி**
**யாழ்ப்பாணம்** (சி-3494)

**ஒப்பம்: திரு. கிறகோரி சந்திரசேகரன்**
**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்**
**யாழ்.மாவட்டம்**

# உலகக் கிண்ண சதுரங்க போட்டி;
# யாழ்.சிறுமிக்கு வெண்கலம்



கிழக்கு ஐரோப்பாவில் அமைந்துள்ள ஜோர்ஜியாவின் பட்டுமி நகரத்தில் கடந்த மாதம் 22ஆம் திகதி முதல் இம்மாதம் 3ஆம் திகதி வரை நடைபெற்ற சர்வதேச சதுரங்க சம் மேளன உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை சார்பாக பங்குபற்றி யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த தர்ஷன் கஜிஷனா என்ற சிறுமி வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

8 வயதிற்குட்பட்ட, 10 வயதுக் குட்பட்ட மற்றும் 12 வயதுக் குட்பட்டவர்களுக்கான உலகக் கிண்ண சதுரங்க போட்டி ஜோர்ஜியா, பட்டுமி, கிராண்ட்பெலாஜியோ ஹோட்டலில் நடைபெற்றது.

இதில் 35 நாடுகளைச் சேர்ந்த 100 இற்கும் மேற்பட்ட சிறுவர், சிறுமிகள் பங்குபற்றியிருந்தனர். இந்தப் போட்டியில் 8 வயதிற்குட்பட்டவர்களுக்கான பிரிவில் இச்சிறுமி போட்டியிட்டு வெண்கலப் பதக்கத்தை வென்றமை குறிப்பிடத்தக்கது. (3)


# அஸ்வெசும கொடுப்பனவை இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்
## நலன்புரி நன்மைகள் சபை

(கொழும்பு)

அஸ்வெசும முதல் கட்ட நிவாரணத்திற்குத் தகுதி பெற்ற பயனாளிகளின், ஜூலை மாதத்துக்கான உதவித்தொகை இன்று பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படும் என நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

பயனாளிகள் இன்று முதல் அவர்களின் வங்கிக் கணக்குகளிலிருந்து உதவித் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியுமென, நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது. (நி)

# சகோதரத்துவத்திற்கான பயணம்
# யாழை வந்தடைந்தது



(யாழ்ப்பாணம்)

சகோதரத்துவ தினத்தினை முன்னிட்டு நேற்றைய தினம் புதன்கிழமை சோஷலிசம் இளைஞர் சங்கம் யாழ் தேவி புகையிரதத்தில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தனர்.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து காலை பயணத்தை ஆரம்பித்து மதியம் யாழ்.தேவி புகையிரதத்தில் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

குறித்த பயணத்தில் குருநாகல் புகையிரத நிலையம் மற்றும் அநுராதபுர புகையிரத நிலையம் ஆகியவற்றில் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

யாழ்ப்பாணத்தை வந்தடைந்தவர்கள், யாழ்ப்பாண புகையிரத நிலைய நூலகத்திற்கு ஒரு தொகுதி நூல்களை வழங்கி வைத்தனர்.

குறித்த குழுவுடன் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், இளைஞர் விவகார பாரத அமைச்சர் ஏரங்க குனசேகர, பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் உள்ளிட்டோரும் வருகை தந்தனர்.

அதனைத் தொடர்ந்து, யாழ்ப்பாண புகையிரத நிலையத்தில் இருந்து ரிம்பர் மண்டபம் நோக்கி நடைபயணம் மேற் கொள்ளப்பட்டு, அங்கு கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன.

இன்றைய தினம் வியாழக்கிழமை எழுவைதீவுக்கு பயணிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அங்கு 200 பனங்கன்று நடுகை செய்யப்படவுள்ளதுடன், எழுவைதீவு பாடசாலைக்கான அபிவிருத்தி நடவடிக்கைகள், மற்றும் தீவின் இளைஞர்களுக்கான விளையாட்டு உபகரணங்களை வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (8-33)

# கால்நடை வைத்திய நிபுணர்களுக்கு பற்றாக்குறை


(கொழும்பு)

இலங்கையில் தற்போது நோய் வாய்ப்பட்ட யானைகள் மற்றும் பிற விலங்குகளுக்கு சிகிச்சையளிக்க தகுதியான 12 கால்நடை வைத்திய நிபுணர்கள் மட்டுமே உள்ளனர் என்று சுற்றாடல் அமைச்சர் தம்மிக பட்டபெந்தி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சில பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களால் இந்த நிபுணர்களில் சிலர் ஊக்கமிழக்கச் செய்யப்பட்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார். யானைகள் கொல்லப்படுவது தொடர்பாக எதிர்க்கட்சி பாராளு மன்ற உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை வெளியிட்டுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்கள் முறைப்பாட்டு இலக்கம் அறிமுகம்



(தருமபுரம்)

வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் பொது மக்கள் முறைப்பாட்டு இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 071 909 0900 என்ற குறித்த இலக்கத்தினை கொண்ட விழிப்புணர்வு பிரசுரத்தை பேருந்துகளில் ஒட்டும் பணி கிளிநொச்சியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் பரிந்துரைக்கமைய பொது போக்குவரத்தின் போது பொது மக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள், இடர்பாடுகளை முறையிடுவதற்காக மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கட்டமைப்பின் கீழ் வடமாகாணத்தில் பொது மக்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை முறையிடுவதற்கான இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்ட நிலையில் பேருந்துகளில் காட்சிப்படுத்தும் பணிகள் கிளிநொச்சியில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி பேருந்து நிலைய பொறுப்பதிகாரி ஈஸ் வரதேவன் கோபிதன் தலைமையில் நடைபெற்ற செயற்றிட்டத்தில் கிளிநொச்சி மாவட்டபதில் அரசாங்க அதிபர் சுப்பிரமணியம்.முரளிதரன் கலந்து கொண்டிருந்தார். தொடர்ந்து ஏனைய நான்கு மாவட்டங்களிலும் இச் செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது. (8-316)

# மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுப் பொருட்கள் அழிப்பு

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு ஒட்டு சுட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட மாங்குளம் பொதுச் சுகாதார பிரிவிலுள்ள கரிப்பட்டமுறிப்பு, ஒலுமடு பகுதிகளில் உள்ள உணவகங்கள் மற்றும் பல்பொருள் வணிகங்கள் மீது நேற்றைய தினம் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது மனித நுகர்விற்கு பொருத்தமற்ற உணவுப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிப்பு செய்யப்பட்டதுடன் சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (8-299)

# கிளி. இயக்கச்சி கோட்டையில் தொல்லியல் வார நிகழ்வு



தொல்லியல் திணைக்களத்தின் 135ஆவது ஆண்டு நிறைவையொட்டி தொல்லியல் வார நிகழ்வு அண்மையில் இயக்கச்சி கோட்டையில் நடைபெற்றது.

கிளி நொச்சி / யாழ்ப்பாண தொல்லியல் திணைக்களத்தின் உதவி பணிப்பாளர் U.A பந்துலஜீவ தலைமையில் குறித்த நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் தொல்லியல் திணைக்களப் பிராந்திய உதவிப் பணிப்பாளரது ஆலோசனைக்கமைவாக சிரமதானம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் தொல்லியல் திணைக்கள மேலாய்வு உத்தியோகத்தர்கள், வலய உத்தியோகத்தர்கள், பராமரிப்பு உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், கிராம உத்தியோகத்தர்கள், கிளி/கோவில்வயல் சி.சி.த.க. பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வவுனியாவில் நெல் அறுவடை விழா

(வவுனியா)



பரசூட் முறையில் விதைப்பு செய்யப்பட்ட நெல் அறுவடை வயல் விழா வவுனியா தாண்டிகுளம் பகுதியில் நேற்று இடம் பெற்றது.

விவசாயத் திணைக்களத்தின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் 70 ஏக்கர் வயலில் விவசாயிகளின் பங்களிப்போடு பரசூட் முறையில் நெல் விதைப்பு சிறுபோகத்திற்காக இடம்பெற்று இருந்தது.

இதன் அறுவடை வயல் விழா தாண்டிக்குளத்தில் உள்ள மு.தேவராசா என்பவரின் வயலில் பிரதம மாகாண விவசாய பணிப்பாளர் திருமதி ஜே.எம்.முரளிதரன் தலைமையில் பாடவிதான உத்தியோகத்தர் கு.கஜேருபனின் வழிகாட்டலில் வவுனியா அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத் சந்திர பிரதம விருந்தினராக கலந்து கொண்ட நிலையில் அறுவடை இடம்பெற்றது.

இதன்போது அதிகளவான விளைச்சல் கிடைக்கப்பெற்றமை அவதானிக்கப்பட்டதுடன், புள்ளிவிவரத்திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டு அதனை உறுதிப்படுத்தியிருந்தனர். (8-250)

# பனை உற்பத்திகளின் ஏற்றுமதி ஊடாக நாட்டுக்கு அந்நியச் செலவாணி கிடைக்கின்றது

## ஆளுநர் தெரிவிப்பு

பனை உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் ஊடாக எமது நாட்டுக்கு பெரும் அந்நியச்செலவாணி கிடைக்கப்பெற்று வருகின்றது என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் வடக்கு மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்து நடத்தும், வடக்கு மாகாண பனை எழுச்சி வாரத்தை முன்னிட்டு "எங்கள் வாழ்வியலில் பனை" என்னும் தலைப்பிலான கண்காட்சி, நல்லூர் முத்திரைச்சந்தியிலுள்ள சங்கிலியன் பூங்காவில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

அதில் கலந்துகொண்டு உற்பத்திப் பொருட்களைப் பார்வையிட்ட பின்னரே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மாகாணத்தின் - மாவட்டத்தின் சொத்தாகவுள்ள பனை வளத்தைப் பயன்படுத்தி பல்வேறு உற்பத்திப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதை நம்பியுள்ள மக்களின் வாழ்வாதாரம் மேம்பட வேண்டும். அவர்களின் உற்பத்திக்கு நியாயமான விலை கிடைக்கவேண்டும்.

எதிர்காலத்தில் வெளிநாடுகளுக்கான ஏற்றுமதி பொறிமுறையை இலகுவாக்கும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். இதன் ஊடாக இடைத்தரகர்களை விட உற்பத்தியாளர்களே அதிக இலாபத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். அவர்களின் வாழ்வாதாரமும் மேம்படும்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மிகச் சிறப்பாகச் செயற்படுகின்றன. ஆனால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அந்தளவுக்கு இல்லை.

கடந்த காலங்களில் அவர்களுக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டிருந்தாலும் அதைப்பயன்படுத்தி அவர்கள் முன்னேறவில்லை.

ஆனால் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் அவ்வாறில்லை. இவ்வாறு சிறப்பாகச் செயற்படுவர்களுக்கு அடுத்துவரும் ஆண்டுகளில் கூடுதலான நிதி ஒதுக்கீட்டை வழங்க முடியும் எனத் தெரிவித்தார். (8)

# யாழில் இரு வாகனங்கள் நேருக்கு நேர் மோதி விபத்து



(யாழ்ப்பாணம்)

யாழ். பலாலி பிரதான வீதியில் கந்தர் மடம் சந்தியில் நேற்று முன் தினம் இரவு யாழ். இந்திய துணைத் தூதரகத்திற்கு சொந்தமான வாகனம் ஒன்றும் கார் ஒன்றும் நேருக்குநேர் மோதி விபத்துக் குள்ளானது.

இரு வாகனங்களிலும் பயணித்தவர்கள் சிறுசிறு காயங்களுடன் உயிர்தப்பியுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். நகர் பகுதியிலிருந்து திருநெல்வேலி பகுதியை நோக்கி சென்று கொண்டிருந்த யாழ். இந்தியத் துணைத் தூதரகத்திற்கு சொந்தமான வாகனம் ஒன்றும், கந்தர்மடம் பகுதியில் இருந்து யாழ்.நகரப் பகுதிக்கு சென்று கொண்டிருந்த கார் ஒன்றுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன.

விபத்தில் இரண்டு வாகனங்களும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாண பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

828





மாலை ஆனதும் நான் உனக்கு அமுதினும் இனியத் தெய்வத் தமிழ்ப் பதிகங்களைச் சொல்லிக் கொடுப்பேன். உன்னுடைய மதுரமான குரலில் அவற்றைப் பாடினால், பாடிய உன் நாவும் இனிக்கும் கேட்கும் என் காதும் இனிக்கும். நமக்கு விருப்பம் இருந்தால் ஆலயங்களுக்குச் சென்று இறைவனைத் தரிசித்து விட்டு அத்தெய்வப் பாடல்களைப் பாடிவிட்டு வரலாம். கோயிலுக்கு வரும் பக்தர்களும் கேட்டு மகிழ்வார்கள். பூங்குழலி! இதைக் காட்டிலும் இனிய வாழ்க்கை மகிழ்ச்சி அளிக்கும் வாழ்க்கை உலகில் வேறு என்ன இருக்க முடியும்? யோசித்துப் பார்த்துச் சொல்லு!" இவ்விதம் சேந்தன் அமுதன் கூறியதையெல்லாம் கேட்டு விட்டுப் பூங்குழலி கலகல வென்று சிரித்தாள்.

"அமுதா! நீ இனியதென்று கருதும் வாழ்க்கையைப் பற்றிச் சொன்னாய்! ஆனால் நான் எத்தகைய வாழ்க்கை வேண்டுமென்று ஆசைப்படுகிறேன், தெரியுமா, வானுலகத்துக்குச் சென்று தேவேந்திரனை மணந்து கொள்ள ஆசைப்படுகிறேன். தேவேந்திரனுடன் ஐராவதத்தில் ஏறி வானத்தில் மேக மண்டலங்களுக்கு மத்தியில் பிரயாணம் செய்ய விரும்புகிறேன். தேவேந்திரனுடைய கையிலிருந்த வஜ்ராயுதத்தைப் பிடுங்கி மேகக் கூட்டங்களின் மீது பிரயோகிக்க ஆசைப்படுகிறேன். வஜ்ராயுதத்தினால் தாக்கப்படும்போது அந்தக் கரிய மேகங்களிலிருந்து ஆயிரம் பதினாயிரம் மின்னல்கள் கற்றைக் கற்றையாகக் கிளம்பி வான மண்டலத்தைச் சுக்கு நூறாகப் பிளப்பதைப் பார்க்க ஆசைப்படுகிறேன். இப்போதெல்லாம் வானத்திலிருந்து இடி விழுந்தால் எங்கேயோ கடலில் அல்லது காட்டில் விழுந்து விடுகிறதல்லவா? நான் அப்படி இடிகளை வீணாக்க மாட்டேன். அரசர்களும் அரசிகளும், இராஜகுமாரர்களும் இராஜகுமாரிகளும், வாழும் அரண்மனைகளாகப் பார்த்து அவற்றின் மேல் இடிகளைப் போடுவேன். அந்த அரண்மனைகள் இடிந்து விழுந்து மண்ணோடு மண்ணாவதைப் பார்த்துக் களிப்பேன். தேவேந்திரன் ஒருவேளை மணந்து கொள்ள இஷ்டப் படாவிட்டால் வாயு தேவனிடம் செல்வேன். அவனுக்கு ஏற்கெனவே பல மனைவிகள் இருந்தாலும் பாதகம் இல்லையென்று என்னை மணந்து கொள்ளச் சொல்லுவேன். அவ்வளவுதான், பிறகு இந்த உலகத்தில் எப்போதும் புயற் காற்றும் சுழிக் காற்றும் சண்ட மாருதமும் அடித்துக் கொண்டேயிருக்கும். பெரிய பெரிய மரங்கள் பெயர்ந்து மாடமாளிகையின் மீது விழுந்து அவற்றை அழிக்கும். கடலில் போகும் மரக்கலன்கள் சண்ட மாருதத்தினால் தாக்குண்டு துகள் துகளாகச் சிதறிப் போகும். அந்தக் கப்பல்களில் பிரயாணம் செய்வோர் கொந்தளிக்கும் கடலில் விழுந்து தவிப்பார்கள். அவர்களில் இராஜகுமாரர்களும் இராஜகுமாரிகளும் இருந்தால் அவர்கள் ஆழ் கடலின் அடிவாரத்துக்குப் போகட்டும் என்று விட்டுவிட்டு, மற்றவர்களை மட்டும் போனால் போகிறதென்று தப்ப வைப்பேன், வாயுதேவனும் ஒருவேளை என்னை மணந்து கொள்ள மறுத்தால், அக்கினி தேவனிடம் செல்வேன். அப்புறம் கேட்க வேண்டுமா? இந்த உலகமே தீப்பற்றி எரிய வேண்டியதுதான்!"

"பூங்குழலி, போதும்! நிறுத்து! ஏதோ ஒரு மனக்கசப்பினால் இவ்விதமெல்லாம் நீ பேசுகிறாய் மனமறிந்து யோசித்துப் பேசவில்லை. உன் மன நிலையை அறிந்து கொள்ளாமல் உன்னிடம் நான் கலியாணப் பேச்சை எடுத்ததே என் தவறுதான், அதற்காக என்னை மன்னித்துவிடு! கடவுள்தான் உன்னுடைய மனக் கசப்பைப் போக்கி அமைதி அளித்து அருள வேண்டும்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## புத்தாண்டுச் சுற்றுலா



ஜான், இனியன், முஸ்தபா, எழில், இவர்கள் அனைவரும் நண்பர்கள். கோவையில் உள்ள ஒரு பள்ளிக் கூடத்தில் பத்து மற்றும் ஒன்பதாவது படித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் பெற்றோர்கள் அங்குள்ள அடுக்கு மாடிக் குடியிருப்பில் அருகருகே குடியிருக்கிறார்கள். அவர்களும் குடும்ப நண்பர்களாக அந்த குடியிருப்பில் வசித்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் பள்ளிக்கு தினமும் அவரவர் சைக்கிள்களிலே சென்று விடுவார்கள்.

முஸ்தபா ஒரு நாள் தனது நண்பர்களிடம் வருகின்ற புத்தாண்டு அன்றைக்கு என்ன புறோகிராம் வைக்கலாம்? என்று கேட்டான். இனியன் ஏதாவது நல்ல படம் பார்க்கப் போகலாம் என்று சொன்னான். ஜான் வேண்டாம் எங்கேயாவது ஒரு சுற்றுலா போகலாம் என்றான். எழில் சிறிது நேரம் யோசித்து விட்டு எனக்கு இப்ப ஒன்றும் தோனவில்லை, என்று ஒதுங்கிக் கொண்டான்.

முஸ்தபா சிரித்து விட்டு நான் ஒரு "திட்டம் வைத்திருக்கிறேன், இன்றைக்கு இரவு நல்லா அதைப் பற்றி யோசித்து விட்டு உங்களுக்கு [illegible] சொல்கிறேன். என்று சொன்னவுடன் நண்பர்களுக்கு சுவாரசியம் தட்டியது. "நல்ல திட்டம் போட்டுவிட்டுச் சொல், நாம் எல்லோரும் அது மாதிரி செய்யலாம் என்று சொன்னார்கள். சரி நான் வருகிறேன் என்று சொல்லி அவரவர்கள் தங்கள் வீடுகளுக்கு சென்றனர்.

மறு நாள் மூவரும் முஸ்தபாவை பிடித்துக் கொண்டனர். என்ன திட்டம் வைத்திருக்கிறாய்? என்று குடைய ஆரம்பித்து விட்டார்கள். பொறுங்கள், இப்பொழுது பள்ளிக்கு நேரமாகி விட்டது, மதிய இடை வேளையில் மேற் கொண்டு பேசலாம் என்று சொல்லவும், அதுவும் சரிதான் என்று மூவரும் அவரவர் வகுப்புக்குள் நுழைந்தனர்.

மதியம் இடை வேளையில் முஸ்தபா சொன்ன திட்டத்தை கேட்டு மூவரும் ரொம்ப நல்ல திட்டம் என்று சொன்னார்கள். எழில் மட்டும் கொஞ்சம் சிந்தனையில் இருந்தது போல் தெரியவும், எழில் என்னுடைய திட்டம் சரியில்லையா? என்று முஸ்தபா கேட்டான். அதெல்லாம் ஒன்றுமில்லை, இந்த திட்டத்தில் நம்முடைய பெற்றோர்களையும் சேர்த்துக்கொண்டால் நன்றாக இருக்கும் என்று பார்த்தேன்.

வெரி குட் அதுவும் நல்ல ஐடியாதான், அவனை பாராட்டிய முஸ்தபா இன்னைக்கு எல்லோரும் அவங்கவங்க வீட்டில் போய் பேசுவோம், நாளைக்கு இதே நேரத்தில் மற்ற விடயங்களை பேசலாம். இப்ப வகுப்புக்கு போகலாம் என்று கிளம்பினார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையானவர்களும் அன்புடையவர்களும் யாருக்கும் அஞ்சத் தேவையில்லை.

– சுவாமி விவேகானந்தர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## அடியார்கள் இல்லாத திருவிழாக்கள் பாரீர்

கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது நம் முதுமொழி. ஊர்தோறும் கோயில்கள் இருந்தால், எந்நாளும் கடவுள் நினைப்பு நம் மனதில் இருந்து கொண்டே இருக்கும்.

ஆலய மணி ஓசை கேட்கின்றபோது, இறைவா! என்கிறோம். மனம் செம்மையில்லாதபோது கோயிலுக்குச் சென்று கடவுளிடம் முறையிடுகின்றோம். ஆம் எங்கள் மனதில் இருக்கக்கூடிய சுமையை ஆண்டவன் சந்நிதியில் இறக்கிவிடுகின்றோம்.

இப்போது உளவியலில் பேசப்படும் ஆற்றுப்படுத்தல் என்பதை நம் ஆலயங்கள் ஏலவே செய்துவருகின்றன.

இதற்கும் மேலாக, கோபுரத்தைக் காணும்போது தரிசிக்கின்றோம். ஆலய வீதியால் செல்லும்போது நின்று வணங்குகின்றோம்.

ஆக, இறை சிந்தனை நம் உள்ளத்தில் நிறைந்திருப்பதால், தீயவற்றை நினைப்பதற்கும் பிறர்க்குக் கெடுதி செய்வதற்கும் இடமேயில்லை.

மாறாக, இறை சிந்தனை அன்பின் ஊற்றாக வெளிப்படும். தன்னுயிர்போல் மன்னுயிரை நேசிக்கின்ற மானிடம் மேலோங்கும். இதன் பொருட்டே நாம் குடியிருக்கின்ற இடங்களில் கோயில்கள் இருக்க வேண்டும் என நம் முன்னவர்கள் கூறிவைத்தனர்.

ஆனால் இப்போது கோயில்கள் அதிகரித்து விட்டனவோ என்று நினைக்குமளவுக்கு எங்கும் கோயில் மயமாகியுள்ளது.

இதை நாம் கூறும்போது, இஃது கோயிலுக்கு எதிரான கருத்து என்று யாரும் நினைத்துவிடக்கூடாது.

மாறாக அரசடி வைரவர், ஆலடிப் பிள்ளையார், கிணற்றடி அம்மன் என ஊர்மக்கள் அன்றாடம் வழிபட்டு வந்த தெய்வங்களுக்கு பெருங்கோயில் கட்டி, குடமுழுக்கு நடத்தி மகோற்சவம் செய்ய முற்பட்டபோது, ஆலயங்கள் அதிகரித்துவிட்டன என்ற நினைப்பு நம்முள் எழவே செய்யும்.

அவ்வாறு நினைப்பதிலும் நியாயம் இருக்கிறது. ஆம், ஊரில் திருவிழா நடைபெறுகின்ற ஒரு கோயில். இதைவிட வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்கள். மற்றும்படி சித்திரபுத்திரர் கதையும் கஞ்சியும், ஒற்றைப் பொங்கல், ஒருநாள் வேள்விஉற்சவம் என்பதோடு நம் ஊர்களில் சிறு தெய்வவழிபாடுகள் நடந்தாகும்.

ஆனால் இன்று சிறு தெய்வங்களுக்கும் காவல் தெய்வங்களுக்கும் பெருங்கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்து அவர்களை கருவறையில் வைத்துப் பூட்டி விட்டோம்.

இதனால், முன்பெல்லாம் கடவுளுக்கு நெருக்கமாக நின்று வழிபட்ட அந்த வாய்ப்பு அற்றுப்போக, கோயில் வழிபாடு நம்மை விட்டு விலகிப் போகிறது.

உண்மை. இப்போது ஆலயங்களில் திருவிழாக்கள் நடக்கின்றன. ஆனால் அங்கு அடியவர்களைக் காணவில்லை.

சுவாமி காவுவதற்கே ஆளில்லை எனும்போது திருவிழாக்கள் உணர்த்தும் தத்துவம் தான் என்ன?

இதே நிலைமை தொடருமாயின், திருவிழாக்களைச் செய்வதற்கு உபயகாரர்கள் உடன்படுவார்களா? என்ற கேள்விக்குப் பதில் காணப்பட வேண்டும்.

இல்லையேல் அதிகரித்த ஆலயங்கள் ஈற்றில், வழிபாட்டை இல்லாமல் செய்வதாக நிலைமை ஆகிவிடும்.

# முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளார்

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளார் என உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

ரணில் அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளார் என அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு உயர் நீதிமன்றில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இவ்வாறு தீர்ப்பழிக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டு ஜூலை 17 ஆம் திகதி அப்போதைய பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நாடு தழுவிய அவசர கால ஒழுங்குவிதிகளை பிரகடனப்படுத்தியதன் மூலம் அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளதாக உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 02 இன் கீழ் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவசரகால ஒழுங்குவிதிகளைப் பிரகடனப்படுத்தியமை, தன்னிச்சையானது மற்றும் செல்லுபடியாகாதது என்று உயர் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதியரசர்கள் ஆயத்தின் பெரும்பான்மையான நீதியரசர்கள் தீர்ப்பளித்தனர்.

பிரதம நீதியரசர் முர்து பெர்னாண்டோ மற்றும் நீதியரசர் யசந்த கோதாகொட ஆகியோர் இந்தத் தீர்ப்பை அறிவித்தனர்.

இருப்பினும் மூன்று நீதியரசர்களில் ஒருவரான அர்ஜூன ஒபேசேகர தனது தீர்ப்பை வழங்கும்போது பதில் ஜனாதிபதியின் அவசர காலச் சட்டப் பிரகடனம் அடிப்படை மனித உரிமைகளை மீறவில்லை என்று அறிவித்துள்ளார். (ம-7)

## "வாயை மூடுங்கள்" சபாநாயகரை நோக்கிக் கூறிய பெண் எம்.பியால் பரபரப்பு

"வாயை மூடுங்கள் என சபாநாயகரைப் பார்த்து ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன தெரிவித்தமையால் பாராளுமன்றத்தில் நேற்று அமைதியின்மை ஏற்பட்டது.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மொழி மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் ரோஹினி கவிரத்ன எம்.பி,

தற்போது வட பகுதியில் உள்ள பல வீதிகள் திறக்கப்படுவதுடன் காணிகளும் விடுவிக்கப்படுகின்றன.

தலதா மாளிகைக்கு முன்பாகவுள்ள வீதி இன்றுவரை வாகனப் போக்குவரத்துக்காக திறக்கப்படாமல் உள்ளமையானது கண்டி நகரின் வளிமாசடைவுக்கு பாரியளவில் பங்களிப்பதாக சுற்றாடல் ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நாட்டில் தற்போது பரவலாக துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெறும் நிலையில் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என அரசாங்கம் கூறுகிறது எனப் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன தெரிவித்தார்.

அதன்போது குறுக்கிட்ட சபாநாயகர் சுற்றிவளைக்காமல் கேள்வியை மட்டும் கேட்குமாறு அறிவுறுத்தினார்.

இதனையடுத்து கருத்து வெளியிட்ட ரோஹினி கவிரத்ன, இந்த விடயங்களை விபரிக்காமல் கேள்விகளை எழுப்ப முடியாது எனத் தெரிவித்திருந்தார்.

எனினும் சபாநாயகர் தொடர்ந்தும் குறுக்கிட்டதால் வாயை மூடிக் கொண்டு தாம் கூறுபவைகளைச் செவிமடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன தெரிவித்ததையடுத்து பாராளுமன்றத்தில் அமைதியின்மை ஏற்பட்டது.

அதன்போது சபாநாயகர் சபை நாகரீகத்துடன் கருத்துகளை வெளியிடுமாறு எச்சரித்திருந்த நிலையில் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினரும் பிரதியமைச்சருமான மஹிந்த ஜயசிங்க ரோஹினி கவிரத்னவின் கருத்துக்கு கண்டனம் வெளியிட்டதுடன் அதனை மீளப் பெறுமாறு கோரியிருந்தார்.

இந்தநிலையில் பாராளுமன்றத்தில் தொடர்ந்தும் அமைதியின்மை நிலவியது. (ம-7)

## பாலகதிர்காமத்தானுக்கு இன்று கொடியேற்றம்

(நல்லூர்)

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானத்தின் விசுவாவசு வருட மகோற்சவமானது இன்று வியாழக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 18 தினங்கள் இடம்பெறும் மகோற்சவம்தனில் எதிர்வரும் 09.08.2025 சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் மறுநாள் மாலை 5.30 மணியளவில் ஆடிவேல் உற்சவமும் இடம்பெறவுள்ளது.

இவ் ஆலயத்துக்கே உரித்தான தனிச்சிறப்புமிகு ஆடிவேல் உற்சவம்தனில் பாலகதிர்காமப் பெருமான் அழகிய கஜவாகனத்தில் சட்டநாதர் வீதியை வலம் வந்து பக்தர்களுக்கு இன்னருள் புரியவுள்ளார். (ம-7)

## 12 மில்லியன் பெறுமதியான போதைப்பொருள் மீட்பு

கொழும்பு, ராஜகிரிய பகுதியில் இராணுவ புலனாய்வுப் பிரிவு மற்றும் கலால்துறை அதிகாரிகள் முன்னெடுத்த கூட்டு நடவடிக்கையின் போது 02 கிலோகிராம் குஷ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

அதன் பெறுமதியானது சுமார் 12 மில்லியன் ரூபா எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன்போது நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான நபர் தலவத்துகொடைப் பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## கொழும்பில் தீ விபத்து நபர் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பு நாரஹேன்பிட்ட பிரதேசத்தில் வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் நபரொருவர் சிக்கி உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, நாரஹேன்பிட்ட பிரதேசத்திலுள்ள 397 இலக்க தோட்டத்தில் உள்ள வீடொன்றில் நேற்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த வீட்டில் தீயில் சிக்கி காயமடைந்த நிலையில் காணப்பட்ட நபரொருவரை பொலிஸார் மீட்டு தேசிய மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

எனினும் பாரதூரமான தீக்காயங்கள் காரணமாக குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

தீவிபத்துக்குள்ளான வீட்டில் வாடகைக்கு குடியிருந்த 50 வயதான நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில் சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Invitation For Bids (IFB) - 2025

## KARACHCHI PRADESHIYA SABHA, KILINOCHCHI DISTRICT

1. The Chairman, Divisional Procurement Committee (Div PC) on behalf of the Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.
2. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty of **Highway Construction/Buildings Construction** for grade mentioned in the table below with the construction Industry Development Authority (CIDA )
4. Qualification requirements are indicated in section -5 ( Schedule) of the Bidding document.
5. Interested bidders may obtain further information from **The Chairman, Procurement Committee, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi (T.P No : 0212285761, Fax No : 0212285690, E-Mail:** kilinochchi1kps@gmail.com) and inspect the bidding documents at the address given below **from 24.07.2025 until 06.08.2025 During 9.00 am to 2.00 pm** on Normal Working Days.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to **The Chairman, Procurement Committee, karachchi Pradeshiya Sabha,A9 Road, Kilinochchi, from 24.07.2025 until 06.08.2025 from 9.00 am to 3.00 pm.** Upon payment of a non-refundable fee as mentioned in the below table. The method of payment will be **by cash.**
7. Bids shall be delivered in duplicate to the address to **The Chairman, Procurement Committee ( Div PC) Karachchi Pradeshiya sabha, A9 Road, Kilinochchi** on or before **10.00 am** on **07th August 2025** Late bids will be rejected. Bids will be opened at above place soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
8. All bids shall be accompanied by a *"Bid-Security,* as in the table below.
9. The pre-bid meeting will be held on **31.07.2025** at **03.00 pm** at the **Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi.**

| | |
|---|---|
| Document Issuing/ Purchasing Period | **From 2025.07.24 – 2025.08.06** |
| Pre – Bid Conference | **At 03.00 Pm on 2025.07.31** |
| Closing and Opening of Bid | **At 10.00 Am on 2025.08.07** |

| S.No | BID No. | Name of the Work | Source of Funds | Estimated Cost (With Out VAT) (Rs.Mn) | Required Bid Security | | ICTAD Grade Required (Highways,Buildings) | Bid Shall be Valid up to | Contract period | Non Refundable fee |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Amount (Rs.) | Valid up to | | | | |
| 1 | NP/KN/KPS/2025/ PU-02 / C.W 14 | CONSTRUCTION OF CONCRETE ROAD FOR JOINTING ROAD MAYAVANOOR ANPUPALA ROAD AND PULUTHIYARU ROAD. | Council | 2.097 | 32,000.00 | **23.10.2025** | C9 or Above (Highways) | 25.09.2025 | 90 Days | 2,000.00 |
| 2 | NP/KN/KPS/2025/ PU-03/C.W 03 | IMPROVEMENT OF GROUND NEAR ROAD , NATHAN KUDIYIRUPPU , PUNNAINEERAVI. | Council | 2.118 | 32,000.00 | **23.10.2025** | C9 or Above (Highways) | 25.09.2025 | 90 Days | 2,000.00 |
| 3 | NP/KN/KPS/2025/ PU-02/C.W 15 | RE-CONSTRUCTION OF SKANTHAPURAM MANIYANKULAM VEETHI AT SKANTHAPURAM | Council | 2.415 | 37,000.00 | **23.10.2025** | C9 or Above (Highways) | 25.09.2025 | 90 Days | 2,000.00 |
| 4 | NP/KN/KPS/2025/ PU-02/ C.W 16 | IMPROVEMENTS OF PERIYA PARANTHAN THARANI KUDIYIRUPPU ROAD | Council | 2.551 | 39,000.00 | **23.10.2025** | C9 or Above (Highways) | 25.09.2025 | 90 Days | 2,000.00 |
| 5 | NP/KN/KPS/2025/ PU-02/ C.W 17 | RE-CONSTRUCTION OF CENTRE VEETHI AT THIRUNAGAR SOUTH | Council | 2.881 | 44,000.00 | **23.10.2025** | C9 or Above (Highways) | 25.09.2025 | 90 Days | 2,000.00 |
| 6 | NP/KN/KPS/2025/ PU-02 / C.W 18 | IMPROVEMENT OF VIVEKANANTHANAGAR MAIN ROAD | Council | 3.398 | 51,000.00 | **23.10.2025** | C9 or Above (Highways) | 25.09.2025 | 90 Days | 2,000.00 |
| 7 | NP/KN/KPS/2025/ PU-02/ C.W 19 | IMPROVEMENT OF VINAYAKAPURAM 6TH ROAD AT KIRUSHNAPURAM | Council | 4.237 | 64,000.00 | **23.10.2025** | C8 or Above (Highways) | 25.09.2025 | 90 Days | 2,000.00 |
| 8 | NP/KN/KPS/2025/ PSDG-03 | RENOVATION OF KONAVIL MAIN ROAD AT KONAVIL. | PSDG | 4.237 | 64,000.00 | **23.10.2025** | C8 or Above (Highways) | 5.09.2025 | 84 Days | 1,000.00 |

The address referred to above is (are) :

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | NP/KN/KPS/ 2025/PU-02/ C.W 20 | IMPROVEMENT OF URUTHTHIRAPURAM NORTH MURUGAN KOVIL MAIN ROAD | Council | 4.930 | 74,000.00 | **23.10.2025** | C8 or Above (Highways) | 25.09.2025 | 90 Days | 2,000.00 |
| 10 | NP/KN/KPS/2025/ PSDG-04 | CONSTRUCTION OF UMAIYALPURAM DUMPING GROUND ROAD | PSDG | 5.762 | 87,000.00 | **20.11.2025** | C8 or Above (Highways) | 23.10.2025 | 84 Days | 2,500.00 |
| 11 | NP/KN/KPS/2025/ PU-02/ C.W 21 | RE CONSTRUCTION OF YOOTHA KOVIL VEETHI AT SELVANAGAR – STAGE II | Council | 6.355 | 96,000.00 | **20.11.2025** | C8 or Above (Highways) | 23.10.2025 | 90 Days | 2,500.00 |
| 12 | NP/KN/KPS/2025/ PU-03/ C.W 05 | IMPROVEMENT WORKS FOR AYURVEDIC HOSPITAL AT THARMAPURAM | Council | 8.135 | 123,000.00 | **20.11.2025** | C8 or Above (Buildings) | 23.10.2025 | 90 Days | 3,000.00 |

Chairman,
Divisional Procurement Committee (DivPC)
Karachchi Pradeshiya Sabha.

(C-3493) 24.07.2025

# யாழில் அடக்கம் செய்யப்பட்ட சடலம்

## நீதிமன்ற உத்தரவின் பேரில் தகனம்

யாழ்ப்பாணத்தில் அடக்கம் செய்யப்பட்ட பெண்ணின் சடலம் நீதிமன்ற உத்தரவின் பேரில் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் வருடம் ஜனவரி மாதம் 30 ஆம் திகதி கொக்குவில் பகுதியில் பெண் ஒருவர் மரணமானார். இவரது மரணம் தொடர்பாக சந்தேகம் இருப்பதாக அவரது உறவினர்கள் புகார் தெரிவித்ததையடுத்து

இவ்விடயம் கோப்பாய் பொலிஸார் ஊடாக யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இதனை தொடர்ந்து குறித்த பெண்ணின் மரணம் தொடர்பாக மரண விசாரணை நடத்துமாறு நீதிமன்றம் பணித்திருந்தது. அதனைத் தொடர்ந்து உடற்கூற்று பரிசோதனையும் இடம்பெற்றது.

எனினும் குறித்த பெண்ணினுடைய மரணத்தில் எந்தவித சந்தேகமும் இல்லை எனத் தெரிய வந்ததை தொடர்ந்து அவருடைய உடலை அவருடைய கணவரிடம் கையளிக்குமாறும் குறித்த பெண்ணை தகனம் செய்யுமாறும் நீதிமன்றம் கட்டளையிட்டிருந்தது.

எனினும் விளக்கமின்மை காரணமாக குறித்த பெண்ணினுடைய சடலம் அடக்கம் செய்யப்பட்டிருந்தது குறித்த பெண் இந்து மதத்தைச் சார்ந்தவராக இருந்ததாலும் அவருடைய உடல் தகனம் செய்யப்படுவதற்கு பதிலாக அடக்கம் செய்யப்பட்டு இருந்ததாலும் அவருடைய கணவர் தன்னுடைய மனைவியுடைய உடலை மீண்டும் அகழ்ந்து எடுத்து தகனம் செய்ய வேண்டுமென யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் மூலம் வழக்கொன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்திருந்த மாவட்ட நீதிமன்றம், குறித்த பெண்ணின் கணவருடைய கோரிக்கையை ஏற்று அவருடைய மனைவியினுடைய உடலை மீண்டும் தோண்டி எடுத்து தகனம் செய்யுமாறு கட்டளை வழங்கி இருந்தது.

இக்கட்டளையின் பிரகாரம் நேற்றுக் கோப்பாய் பொலிஸாரின் முன்னிலையில் நல்லூர் பிரதேச சபை மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர், கிராமசேவை உத்தியோகத்தர் மற்றும் சட்டத்தரணிகள் முன்னிலையில் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் வழக்கில் சட்டத்தரணி T.நீதன் அனுசரணையில் சட்டத்தரணி மகேஸ்வரன் மயூரன் முன்னிலையாகியிருந்தார். (ம-7)

# வாகன இறக்குமதியை கட்டுப்படுத்தவில்லை

## மத்திய வங்கி ஆளுநர்

வாகன இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கமோ அல்லது மத்திய வங்கியோ எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை என்று மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று (23) மத்திய வங்கியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வாகன இறக்குமதியைக் கட்டுப்படுத்த அரசாங்கமா அல்லது மத்திய வங்கியா முடிவு செய்துள்ளதா என்பது குறித்த கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கேள்வி - அரசாங்கமும் மத்திய வங்கியும் வாகன இறக்குமதியைக் கட்டுப்படுத்துவது குறித்து பரிசீலித்து வருவதாக அண்மைய நாட்களில் பல செய்திகள் வந்துள்ளன.

இதில் ஏதேனும் உண்மை உள்ளதா?

பதில் - அவற்றைக் கட்டுப்படுத்துவதில் மத்திய வங்கி எந்தக் கவனமும் செலுத்தவில்லை. திறக்கப்பட்டுள்ள சந்தைகள் திறந்தே இருக்கும். அரசாங்கத்திற்கும் அத்தகைய நோக்கம் இல்லை என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய பிரதம...

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நேற்று அரசியலமைப் புப் பேரவை கூடியபோது, இந்த அங்கீ காரம் வழங்கப்பட்டுள்ளது.

புதிய பிரதம நீதியரசர் பதவிக்கு உயர் நீதிமன்ற நீதியரசர் ப்ரீத்தி பத்மன் சூரசேனவின் பெயரை ஜனாதி பதி அநுர குமார திஸாநாயக்க, அரசி யலமைப்புப் பேரவைக்கு பரிந்துரைத் தார்.

அந்தப் பரிந்துரை நேற்று முன் தினம் அரசியலமைப்புப் பேரவைக்கு அனுப்பப்பட்ட நிலையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஊழல், மோசடி மற்றும் அதிகார துஷ்பிரயோகம் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலை வராகவும் பணியாற்றிய ப்ரீத்தி பத்மன் சூரசேன, 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்கவால் நீதிச் சேவை ஆணைக் குழுவின் உறுப்பினராகவும் நியமிக் கப்பட்டிருந்தார். (ம-7)

## வரலாற்றை...

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரை யாற்றும்போதே இவ்வாறு குற்றச் சாட்டை முன்வைத்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், 1983ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கத்தின் உந்துதலுடன், குறிப் பாகக் கொழும்பு உட்பட வடக்கு கிழக்குக்கு வெளியே திட்டமிடப்பட்டு தமிழர்கள் வேட்டையாடப்பட்டனர்.

இராணுவத்தினரும் பொலிஸா ரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கியி ருந்தனர்.

சில சாதாரண சிங்கள மக்கள், தங் களின் நண்பர்களைப் பாதுகாப்பதற் காக தங்களால் முடிந்தளவு, தமிழ் மக்களை மறைத்து வைத்திருப்பதற் கும் உதவியிருந்தார்கள்.

தற்போதைய அரசாங்கம் தங்களை சகல சந்தர்ப்பங்களிலும் இனவாதி கள் இல்லை என்று கூறி வருகின்றது.

எனினும், வடக்கு கிழக்கு மக்கள் கறுப்பு ஜூலை தினத்தை நினைவு கூரும் இன்றைய தினம் (நேற்று) அரசாங்கம் தெற்கில் இருந்து இளை ஞர் குழுக்களை வடக்கிற்கு அனுப்பு கிறது.

அந்த நினைவுகூரலை முழுமை யாக மாற்றியமைக்கும் வகையில் சகோதரத்துவம் என்ற பெயரில் அர சாங்கம் இவ்வாறான செயற்பாடு களில் ஈடுபடுகிறது.

ஜே.வி.பி அரசாங்கத்துக்கு இன வாதம் இல்லை என்றால், இன்றைய தினம் கறுப்பு ஜூலையை நினைவு கூர்ந்திருக்க வேண்டும்.

இன்றைய தினத்தை சகலரும் நினைவுகூரும் தினமாக தற்போதைய அரசாங்கம் மாற்றியமைத்திருக்க வேண்டும்.

எனினும் இதற்கு மாறாக வர லாற்றை மறைக்கவும், மாற்றியமைக் கவும் தற்போதைய அரசாங்கம் முயல் கிறது என்றார். (ம-7)

## வடக்கில்...

மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.கே.நிஹால் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய 5 மாவட்டங் களினதும் ஒவ்வொரு பிரச்சினை களும் தனித்தனியாக ஆராயப்பட்டு தீர்வு காணப்பட்டன.

இதன்போது ஏனைய அரச திணைக் களங்களுடனான காணி மறுசீர மைப்பு ஆணைக்குழுவின் காணி தொடர்பான பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட்டன.

பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு வின் காணி, வனவளத் திணைக் களம், வனஜீவராசிகள் திணைக் களம் வசம் உள்ள காணி மறுசீர மைப்பு ஆணைக்குழுவின் காணிகள் என்பனவற்றை ஆளுநர் ஊடாக விடு விக்கக் கோருவதற்கும் தீர்மானிக்கப் பட்டது.

அத்துடன் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளில் வசிப்போருக்கான உறு திப் பத்திரங்கள் அடுத்த மாதம் வழங் கப்படும் என காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் தெரி வித்தார்.

மேலும், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளிலிருந்து மணல் அகழ்வுக் கான அனுமதி ஒருபோதும் வழங்கப் படாது எனவும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் காணியை குத்த கைக்குப் பெற்றுக்கொண்டுள்ள வேறு திணைக்களங்களும் அதனை முன் னெடுப்பதற்கான அனுமதி வழங்கப் படாது என்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் குறிப் பிட்டார்.

மேலும் காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவின் காணிகளை புதிதாக வழங் குவது மற்றும் அதனை ஒழுங்கு படுத்தும் நடவடிக்கைகளை மாவட்டச் செயலாளர்கள் தலைமையில் முன் னெடுக்குமாறும் ஆணைக்குழுவின் தலைவர் பணித்தார். (ம-7)

## காப்பு...

குழியின் 2ஆம் கட்டத்தின் 18ஆம் நாள் அகழ்வு நேற்று முன்னெ டுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வின்போது காப்பு போன்ற வளையம் ஒன்று அடையாளம் காணப்பட்டுள் ளது. (ம-7,33)

## காத்...

காய்க்கு நேற்று கடும் கிராக்கி நிலவியது.

இன்று ஆடி அமவாசை விர தம் அனுஷ்டிக் கப்படவுள்ள நிலையில் பிதிர்க் கடன் தீர்ப்பதற் கான உணவில் பிரதானமாக காத்தோட்டிக் காய் சேர்ப்பது வழமையாகும்.

இந்நிலையில் வடமராட்சியில் உள்ள சந்தை களில் காத்தோட் டிக் காய் 100 கிராம் 500 ரூபாய் க்கு விற்பனை செய்யப்பட்டது.

யாழில் மேலும் சில இடங்களில் ஒரு காத்தோட்டிக் காய் 250 ரூபாய் க்கு விற்பனை செய்யப்பட்டமை குறப்பிடத்தக் கது. (ம-7)

## நாடு...

சுற்றிவளைப்பின் போது 458 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப் படை மற்றும் ஆயுதப் படைகள் ஒருங் கிணைந்த முயற் சிகளில் இந்த கைதுகள் முன் னெடுக்கப்பட் டுள்ளன.

இதன் போது அதிகாரிகள் கணிசமான அளவு சட்டவிரோதப் பொருட்களைக் கைப்பற்றினர்.

இதில் 728.25 கிராம் ஐஸ், 166.822 கிராம் ஹெரோயின் மற்றும் 583.71 கிராம் கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் போதைப்பொருள் மற்றும் அதனுடன் தொடர்புடைய குற் றச் செயல்களை எதிர்த்துப் போராடு வதற்கான பரந்த முயற்சியின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை முன் னெடுக்கப்பட்டது. (ம-7)

## தமிழ் அரசியல்...

குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறும் நிகழ்வின் முதன் நாளான இன்று காலை 10 மணியளவில் துருவேறும் கைவிலங்கு நூல் அறிமுகமும் ஆவண ஒளித் தொகுப்பு வெளியீடும் இடம்பெறவுள் ளது.

அத்துடன் சிறை வாழ்க்கை உணர் கண்காட்சி, விடுதலை நீர் சேகரிப்பு என்பன காலை முதல் தொடர்ச்சி யாக இடம்பெறவுள்ளன. (ம-7)












































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட நபர் காயம்

யாழில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபரொருவர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று (23) கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நந்தாவில் அம்மன் ஆலயத்திற்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில், மதுபோதையில் இருந்த இருவருக்கிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டு அது கைக்கலப்பாக மாறியுள்ளது.

இந்தநிலையில் கூரிய ஆயுதத்தால் குறித்த நபர் மீது தாக்குதல் நடாத்திவிட்டு சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளார்.

குறித்த நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ம-7)

# யூலை படுகொலையின் 42 ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு

## லண்டனில் ஆர்ப்பாட்டம்




யூலை கலவரத்தின் 42 ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு லண்டனில் இனப்படுகொலைக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றது.

தமிழ் இளையோர் அமைப்பு மற்றும் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் லண்டனில் உள்ள பாராளுமன்ற சதுக்கத்தில் நேற்று (23) மாலை குறித்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

இதன்போது, 42 ஆண்டுகளுக்கு முன் நடந்த யூலைப் படுகொலைக்கு நீதி கோரியும்,

தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைக்கு நீதி கோரியும் கோசங்கள் எழுப்பப்பட்டதுடன், தமிழ் இன அழிப்பின் நிழற்பட காட்சிப் படுத்தலும் இடம்பெற்றது.

இதில் புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்கள் பெருமளவில் கலந்து கொண்டிருந்தனர். (ம-7)

# மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 22 . 04 . 1933 | 23 . 07 . 2025 |

## இராசதுரை பரமேஸ்வரி

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை பரமேஸ்வரி அவர்கள் 23.07.2025 நேற்று புதன்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை அவர்களின் பாசமிகு மனைவியும் சிவஞானேஸ்வரி, சிவஞானேஸ்வரன், லிங்கேஸ்வரி, ஜமுனா, உஷாதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற புலேந்திரன் மற்றும் மாலினி, மகேந்திரன். யோகராசா, சந்திரபாலன் ஆகியோரின் மாமியாரும் பத்மேந்திரா, பாலேந்திரா, ஹரிகரேந்திரா, கிரிஷாந், கீர்த்தனா, பிரசாந், வினோதா, பபிதா, நர்மதா, அனுராஜ், வைஷ்ணவி, பகீர்த்தனா, ரயுராம், பவராம், அஜந்தா, சிபானி, திருஷாந்தி, ஜெயரூபி, மதியழகன், தாட்சாயினி, பாபுராஜ், செந்தாளன், சத்தியராஜ், சுகன்யா, றொபி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிரனுஜன், அபூர்வஜா, சாயிஷா, கருண், ஆருதி, ஆஷ்வி, சானுகா, நிஷான், நிகேசன், வரன்ஜா, லிதுன்ஜா, ருத்ரஜா, லித்வின், தானியா, இயல், அகரன், வெண்ணிலா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 24.07.2025 வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(1356)

தகவல் :
குடும்பத்தினர்

## 5 மனித...

செம்மணி மனித புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வின் 18 ஆம் நாள் நேற்று யாழ்ப்பாண நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா மேற்பார்வையில் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ குழுவினர், சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் தலைமையிலான குழுவினர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல்துறை மாணவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள், தடயவியல் பொலிஸார், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர், தொல்லியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சிவரூபி சஜிதரன் ஆகியோரின் பங்கேற்புடன் அகழ்வுப் பணிகள் நடைபெற்றது.

அகழ்வுப் பணிகள் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த சட்டத்தரணி வி.எஸ்.நிரைஞ்சன்,

18ஆம் நாள் அகழ்வின் போது புதிதாக ஐந்து மனித எலும்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டதுடன் கடந்த மூன்று தினங்களில் 20 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. அவற்றில் இரண்டு எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டது.

மொத்தமாக 85 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 67 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டது என்றார். (ம-7,33)


கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3950/-
11-16 Kg 2650/-
21-27 Kg 2470/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1400/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2000/-
Swiss 11Kg - 2480/- Australia 11Kg - 2145/- Italy 11Kg - 2260/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237



புதிய பிரிவுகள் ஆரம்பம்
26.07.2025

தொழிற்துறைக்கணக்காளர் ஆவதற்கு
aat (SriLanka)
(AA1, AA2, AA3)
Qualification:- G.C.E O/L 6 Passes
(Medium - Tamil & English)

✧ A/L மாணவர்களின் நலன் கருதி வார நாட்களில் aat வகுப்புக்கள் நடாத்த தீர்மானித்துள்ளோம்.

கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business Level I,II
Qualification:- G.C.E A/L 3 Passes(Medium - Tamil & English)

Further Details:- Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382
(C-3486) 0774405917



புதிய மாணவர்களை அனுமதித்தல் 2024/2025
13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி
(தொழில் கல்வி) நிகழ்ச்சித் திட்டம்

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியின் 13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டத்திற்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இவ் விண்ணப்பப்படிவத்தினை பாடசாலை நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

கற்கை நெறிகள் விபரம்
1. பிரயோக தோட்டக்கலை
2. கணனி வடிவமைப்பு
3. மோட்டர் இயந்திர தொழில்நுட்பம்
4. சுற்றுலா மற்றும் விருந்தினர் உபசரிப்பு
5. உணவு பதப்படுத்தல் கல்வி
6. மின் மற்றும் மின் வலு தொழில்நுட்பம்

விண்ணப்ப முடிவுத் திகதி : 05.08.2025

- அதிபர்
(C-3492)



வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ். நகரில் 5 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.
♦ சம்பளம் 60,000/-
♦ உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
♦ வயதெல்லை 33 - 55
தொடர்புகளுக்கு :
075 498 5400, 077 937 0000
021 221 7600
(1355)



வைத்தியம்

கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி
மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி |
இருதயவலி | தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்.
மிகச்சிறந்த மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(1357)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org